


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 183 14.02.2026 சனிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 183 Saturday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

# திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ.2,000 ஆக உயர்வு

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(14–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–2
பிறை: தேய்பிறை
திதி
துவாதசி மாலை 4.43 வரை
பிறகு திரயோதசி
நட்சத்திரம்:
பூராடம் இரவு 7.00 வரை
பிறகு உத்திராடம்
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00–10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30 – 3.00 மணி.
சூலம் – கிழக்கு
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 6–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | பொறுப்பு |
| ரிஷபம் | போட்டி |
| மிதுனம் | தெளிவு |
| கடகம் | வெற்றி |
| சிம்மம் | கடமை |
| கன்னி | ஆக்கம் |
| துலாம் | ஓய்வு |
| விருச்சிகம் | உற்சாகம் |
| தனுசு | நன்மை |
| மகரம் | மன்மை |
| கும்பம் | உழைப்பு |
| மீனம் | லாபம் |

## மு.க.ஸ்டாலின் வாக்குறுதி

## 3 மாதம் + கோடை சிறப்புத் தொகையுடன் ரூ.5,000 வரவு வைப்பு



**சென்னை, பிப்.14:** எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் வென்று மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி பயனாளர்களுக்கு வழங்கப்படும் என அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், "மிகவும் முக்கியமான விஷயத்துக்காக தான் இந்த வீடியோ. இன்று காலை அரசு சார்பில் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்ட பயனாளிகளுக்கு ரூ.5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவாக வந்திருக்கும்.

எதற்காக இந்த பணம் என்றால், நாங்கள் ஆட்சி பொறுப்பேற்றபோது கரோனா நோய் பரவலின் தாக்கம் உச்சத்தில் இருந்தது. அதை சமாளித்து மக்களின் உயிரை காத்தது மட்டுமல்லாது வாழ்வாதாரத்தை காக்கும் வகையில் ரூ.4 ஆயிரம் நிவாரணத் தொகையும் வழங்கினோம். முந்தைய ஆட்சியில் விட்டுச் சென்ற நிதி நெருக்கடியை சமாளித்து ஆட்சிக்கு வந்ததும் பல திட்டங்களை நிறைவேற்றினோம்.

ஆட்சிபொறுப்பை ஏற்பதற்கு முன்பாக மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என அறிவித்தேன். அப்போது இது சாத்தியமே இல்லை என சிலர் சொல்லி இருந்தார்கள். இருப்பினும் நிதி நெருக்கடியை சமாளித்து, ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை மீறி கடந்த 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறோம். முதலில் 1.13 கோடி மகளிருக்கு பயனளித்து வந்த இந்த திட்டமானது அண்மையில் விரிவுபடுத்தப்பட்டது. இப்போது 1.31 கோடி மகளிர் பயன் பெற்று வருகின்றனர்.

இது வெறும் நிதியுதவி மட்டுமல்ல. சமூகத்தில் பெண்கள் ஆற்றும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலான உரிமைத் தொகை. இதை கொண்டு அன்றாட வீட்டுச் செலவுகள், குடும்பத்தினரின் மருத்துவச் செலவுகள், குழந்தைகளின் கல்விச் செலவுகள் என பல அத்தியாவசிய செலவுகளை மகளிர் தாங்களாவே மேற்கொள்ள இந்த திட்டம் வழிவகுக்கிறது. அதனால்தான் ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதியை திட்ட பயனாளர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்ற நாளாக அமைந்துள்ளது. சிறப்பு வாய்ந்த இந்த திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றுகின்றன.

இந்த உரிமைத் தொகையை மேம்படுத்த வேண்டும் என நாம் செயல்பட்டு வருகின்றோம். அதற்கு எதிராக டெல்லியில் உள்ள ஒரு கூட்டமும், தமிழ்நாட்டில் அவர்களுக்கு அடிமையாக உள்ள மற்றொரு கூட்டமும் எதிர்வரும் தேர்தலை காரணம் காட்டி அடுத்த மூன்று மாதங்களுக்கு இந்த மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கான சூழ்ச்சி செய்வதாக தகவல். இது சார்ந்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் சிலர் முயற்சி செய்வதாக செய்திகள் வருகிறது.

1.31 கோடி மகளிர் பயனடையும் இந்த திட்டத்தை மூன்று மாதங்கள் நிறுத்தி வைத்தால் நீங்கள் எவ்வளவு சிரமங்களுக்கு ஆளாவீர்கள் என்பதை உங்கள் வீட்டில் ஒருவராக உள்ள எனக்கு நன்றாகவே தெரியும். கடும் வெயிலில் வேலைக்கு செல்ல கடினமாக இருக்கும் கோடை காலத்தில் இந்த தொகை நிறுத்தப்பட்டால் உங்களுக்கு எவ்வளவு வலி ஏற்படும் என்பது எனக்கு தெரியும். உங்கள் மாதாந்திர செலவை எப்படி சமாளிக்க முடியும். குடும்பத்தினருக்கு மாத்திரை மருந்து வாங்கித் தர முடியுமா? தேர்வு நேரத்தில் குழந்தைகளுக்கான கல்விச் செலவை சமாளிக்க முடியுமா? இதையெல்லாம் எண்ணி பார்த்துதான் முக்கியமான முடிவை எடுத்துள்ளேன்.

அதன்படி இந்த பிப்ரவரி மாதம் மட்டுமல்லாது அடுத்த இரண்டு மாதங்களான மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மகளிர் உரிமைத் தொகையையும் சேர்த்து ரூ.3 ஆயிரம், கூடுதலாக கோடை கால செலவை கருத்தில் கொண்டு மேலும் ரூ.2 ஆயிரம் சிறப்பு தொகையும் சேர்த்து இந்த பிப்ரவரி மாதம் ரூ.5 ஆயிரத்தை சிறப்பு மகளிர் உரிமைத் தொகையாக 1.31 கோடி மகளிருக்கு வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இந்த தருணத்தில் உன்னொரு அன்பான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். இந்த 5 ஆயிரம் ரூபாயை அடுத்த மூன்று மாதங்களுக்கு நீங்கள் பயன்படுத்த வேண்டி உள்ளது. அதனால் கொஞ்சம் கவனமாக செலவிடுங்கள். முடிந்தவரை சேமிக்கவும் பாருங்கள்.

அன்பு சகோதரிகளே, உங்கள் ஆதரவோடு அடுத்து அமைய உள்ளதும் திராவிட மாடல் ஆட்சிதான். அதனால் உங்கள் மனம் குளிரும் சிறப்பான அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். திராவிட மாடல் 2.0 ஆட்சியில் உங்களுக்கான உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். சொன்னதை செய்யும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி இது. இதை எப்படி செய்வீர்கள் என சிலர் கேட்கலாம். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் வளர்ச்சி பெற செய்துள்ளோம். அதனால் எந்த தடை வந்தாலும் அதையெல்லாம் தாண்டி 'தமிழ்நாடே' வெல்வோம் ஒன்றாக" என்றார் முதல்வர் ஸ்டாலின்.

# நிறுவனங்கள் ஏஐ பயன்பாடு: உலக அளவில் இந்தியா இரண்டாமிடம்

**புதுடெல்லி, பிப்.14:** செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் பட்டியலில் உலக அளவில் இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளதாக இஸட்ஸ்கேலா் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஏஐ மற்றும் இயந்திரக் கற்றல் தொழில்நுட்பங்களை அதிக நிறுவனங்கள் பயன்படுத்தும் பட்டியலில் முதலிடத்தில் அமெரிக்கா உள்ளது.

தில்லியில் பிப்.16 முதல் பிப். 20 வரை ஏஐ தாக்கம் தொடா்பான உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் என்விடியா, கூகுள், ஓபன் ஏஐ உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் (சிஇஓ) பங்கேற்கவுள்ளனா்.

இந்நிலையில், 2026-ஆம் ஆண்டுக்கான ஏஐ பாதுகாப்பு அறிக்கையை இஸட்ஸ்கேலா நிறுவனம் வெளியிட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது: 2025 ஜனவரி முதல் டிசம்பா வரை இஸட்ஸ்கேலா் ஜீரோ டிரஸ்ட் எக்ஸ்சேஞ்ச் பாதுகாப்பு தளத்தில் ஒரு டிரில்லியன் ஏஐ மற்றும் இயந்திரக் கற்றல் தகவல் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் ஜூன் முதல் டிசம்பா் வரை 8,230 கோடி ஏஐ மற்றும் இயந்திரக் கற்றல் பரிமாற்றங்களை இந்திய நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன. இது ஆசிய-பசிபிக் பிராந்திய பகுதியின் மொத்த பரிமாற்றத்தில் 46.2 சதவீதமாகும்.





தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடா்பு (3,130 கோடி), உற்பத்தி (1,570 கோடி), சேவைகள் (1,260 கோடி) மற்றும் நிதி மற்றும் காப்பீடு (1,220 கோடி) என உலக அளவில் ஏஐ மற்றும் இயந்திரக் கற்றல் பரிமாற்றங்களில் ஈடுபடுவதில் இந்திய நிறுவனங்கள் இரண்டாமிடத்தில் உள்ளன.

இந்திய நிறுவனங்கள் பெரும்பாலும் ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த தொடங்கினாலும் தரவுகள் கசிவை அவா்களால் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சாட்ஜிபிடி மற்றும் கிராமா்லி போன்ற ஏஐ தளங்களில் அதிகப்படியான தரவுகள் உள்ளீடு செய்யப்படுவதால் அவற்றில் பெரும் நெரிசல் ஏற்படுகிறது. சாட்ஜிபிடியில் மட்டும் 41 கோடி தரவுகள் இழப்பு தடுப்புக் கொள்கை விதிமீறல் சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

# எப்ஸ்டீன் தொடர்புக்காக ஹர்தீப் பூரி பதவி விலக வலியுறுத்தி காங். எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்




**புதுடெல்லி, பிப்.14:** ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் தொடர்பு வைத்திருந்த மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 12-ம் நாளான இன்று நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரிக்கு தொடர்பு இருந்ததாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று செய்தியாளர்களிடம் கூறி இருந்த நிலையில், இன்று இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அமெரிக்காவின் நியூ யார்க் நகரை சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஜெப்ரி எப்ஸ் டீன். புளோரிடா மாகாணம், பாம் பீச் பகுதியில் இருந்த அவருக்குச் சொந்தமான பண்ணை வீடுகளில் சிறுமிகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக கடந்த 2005-ம் ஆண்டில் புகார்கள் எழுந்தன.

இதுதொடர்பான வழக்கில் ஜெஃப்ரிக்கு 13 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் இருந்து அவர் வெளியே வந்த பிறகும் சிறுமிகளை கடத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய வழக்கில் கடந்த 2019-ம் ஆண்டு ஜூலையில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். கடந்த 2019 ஆகஸ்ட் 10-ம் தேதி மான் ஹாட்டன் சிறையில் அவர் தற்கொலை செய்து கொண்டார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள், அமெரிக்காவின் முன்னணி தொழிலதிபர்களுக்கு எப்ஸ்டீனுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததாகக் கூறப்படுகிறது. இவை தொடர்பான ஆவணங்கள், புகைப்படங்கள், வீடியோக்கள் வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றன.

இந்நிலையில், ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பான கோப்புகளில் ஹர்தீப் சிங் பூரியின் பெயர் இடம் பெற்றுள்ளதாக ராகுல் காந்தி நேற்று குற்றம் சாட்டியிருந்தார். நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, "எப்ஸ்டீன் கோப்புகளில் ஹர்தீப் சிங் பூரி, அனில் அம்பானி ஆகியோரின் பெயர்கள் உள்ளன. இது தொடர்பாக என்னிடம் உள்ள தரவுகளை நான் அங்கீகரிக்கிறேன்" என தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, "நான் சர்வதேச அமைதி நிறுவனத்தில் பணியாற்றியபோது, அதன் தலைவர் டெர்ஜே ரோட்-லார்சன் மூலம் எப்ஸ்டீனை சந்தித்தேன். ஒட்டுமொத்தமாக 3 அல்லது அதிகபட்சம் 4 முறை மட்டுமே அவரைச் சந்தித்துள்ளேன். அதுவும் ஒரு தூதுக்குழுவின் ஒரு பகுதியாகவே அந்த சந்திப்புகள் நடைபெற்றன. அவரது குற்றச் செயல்களுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுக்கள் கோமாளித் தனத்தின் உச்சம். அவரது கருத்துக்கள் பொழுதுபோக்கு அம்சங்களைப் போன்றவை. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது அவரதுவாடிக்கை. நமது நாட்டில் இரு வகையான தலைவர்கள் இருக்கிறார்கள். நாட்டை முன்னேற்றுவதற்காக 24 மணி நேரமும் உழைக்கக்கூடிய தலைவர்களும் இருக்கிறார்கள்; கோமாளித்தனமான தலைவர்களும் இருக்கிறார்கள்" என்று கூறினார்.

எப்ஸ்டீன் தன்னைப் பற்றி குறிப்பிட்டிருந்த ஒரு மின்னஞ்சலை சுட்டிக்காட்டிய அவர், ராகுல் காந்தி அந்த மின்னஞ்சல்களை முழுமையாகப் படிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## அகமதாபாத் விபத்து

# விமானி திட்டமிட்டே எரிபொருள் 'சுவிட்சை' நிறுத்தியதாக இத்தாலி பத்திரிகை வெளியிட்ட செய்தியால் பரபரப்பு

**அகமதாபாத், பிப்.14:** அகமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்து தொழில்நுட்பக் கோளாறால் ஏற்படவில்லை. விமானி திட்டமிட்டு இன்ஜினுக்கு செல்லும் எரிபொருள் 'சுவிட்சை' நிறுத்தியுள்ளார் என்று இத்தாலிய பத்திரிகையில் பரபரப்பான செய்தியொன்று வெளியாகியுள்ளது.



இதுகுறித்து இத்தாலியின் கொரியர் டெல்லா செரா நாளிதழில் கூறப்பட்டுள்ளதாவது: குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் ஏர் இந்தியா 171 விமானம் விபத்துக்குள்ளானது. இதில் 260 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டுமே உயிர்பிழைத்தார். இது குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட்டது. அதில், இந்த விபத்து தற்செயலானது அல்ல திட்டமிட்ட செயல் என தெரிய வந்துள்ளது.

விமானத்தின் எரிபொருள் கட்டுப்பாட்டு சுவிட்சுகள் மேனுவலாக 'ஆஃப்' செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. இது இயந்திரக் கோளாறல்ல என்றும், மனித தலையீட்டால்தான் இந்த விபத்து நிகழ்ந்தது என்றும் அமெரிக்க நிபுணர்கள் கருதுகின்றனர். இவ்வாறு அந்த நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானி சுமித் சபர்வால் எரிபொருள் சுவிட்சுகளை அணைத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அவர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்ததாக விசாரணை அறிக்கை கூறுகிறது.

இந்த விமான விபத்து தொடர்பான விசாரணை பிரிவு வெளியிட்ட முதற்கட்ட அறிக்கையில், "காக்பிட் உரையாடல்கள் குறித்த தகவல்கள் இடம்பெற்றிருந்தன. அதில், ஒரு விமானி "ஏன் எரிபொருளை நிறுத்தினாய்?" எனக் கேட்க, மற்றொருவர் "நான் அவ்வாறு செய்யவில்லை" என்று பதிலளிப்பது பதிவாகியிருந்தது.

இந்தியா நிராகரிப்பு: விமான விபத்து புலானாய்வு அமைப்பு (ஏஏஐபி) கூறுகையில், "இத்தாலி ஊடகத்தின் கருத்துகள் தவறு. இந்த விபத்து குறித்து தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. எனவே, இந்த விவகாரத்தில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

சரிபார்க்கப்படாத இந்த செய்தி பொதுமக்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தும் என்பதுடன் விசாரணையின் நேர்மையை குறைமதிப்புக்கு உட்படுத்தும் அபாயம் உள்ளது" என தெரிவித்துள்ளது.

## பனைக்குளத்தில் புதிய கபூர் ஸ்தானில் பள்ளிவாசல் கட்ட துஆ ஓதப்பட்டது



ராமநாதபுரம் மாவட்டம் பனைக்குளத்தில் புதிய கபூர் ஸ்தானில் பள்ளிவாசல் கட்ட துஆ ஓதப்பட்டது.

## மகளீருக்கு ஐந்தாயிரம் வளத்தி ஊராட்சியில் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்





**விழுப்புரம், பிப்.14:** விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக பிப்பிரவரி,மார்ச், ஏப்ரல் மாதத் முன்பணத் தொகையாக ₹3000 கோடைக்கால சிறப்புத் தொகை₹2000 சேர்த்து பயனாளிகளுக்கு ஐந்தாயிரம் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டதை அடுத்து பொதுமக்களுக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

**அகரம் ராமதாஸ்**
**செய்தியாளர்**

## இளமனூரில் சமத்துவ வார விழா



**மதுரை,பிப்.14:** மதுரை, இளமனூர் அரசு ஆதிதிராவிடர் நல மேனிலைப் பள்ளியில் சமத்துவ வார விழா பாவாணர் நூலகத்தில் நடைபெற்றது. தலைமையாசிரியர் கனகலட்சுமி தலைமை வகிக்க, ஆசிரியை தேவி முன்னிலை வகித்தார்.

தமிழாசிரியர் மகேந்திர பாபு வரவேற்றார். பள்ளி அளவில் நடைபெற்ற கட்டுரை, முழக்கத்தொடர்,வினாடிவினா, ஒளிப்படம் எடுத்தல் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழும், நினைவுப்பரிசும் தலைமையாசிரியர் கனகலட்சுமி வழங்கினார்.

போட்டிகளை அருண்குமார் ஒருங்கிணைத்தார். கட்டுரைப் போட்டியில் ரெஜினா, கிஷோர்க்கார்த்திக், முழக்கத்தொடரில் சக்திபிரியா, பிரியதர்ஷினி, சௌமியா, சரவணன், ஒளிப்படத்தில் விஷ்ணுதர்சன், கனியரசி, வினாடிவினாவில் கமலக் கண்ணன், சங்கர் பரிசும், சான்றிதழும் பெற்றனர். மாணவர் விகாஷ்சேவான் நன்றி கூறினார்.

## என் ஊர் என் கனவு திட்டம்



**திருவண்ணாமலை, பிப். 14:** மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 'என் ஊர், என் கனவு திட்டம் குறித்து மாவட்ட அளவிலான கலந்தாய்வு கூட்டம் மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ. கிரி அவர்கள் மாநகராட்சி மேயர் திருமதி.நிர்மலா வேல்மாறன் அவர்கள், மாநில தடகள சங்கத் துணைத் தலைவர் எ.வ.வே கம்பன் அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மதுரை அழகர் கோவிலில் பாண்டியர் கால நாணயங்கள் வெளியீடு



**மதுரை பிப். 14:** மதுரையில் உள்ள அழகர்கோவில் கள்ள ழகர் கோவிலில் பாண் டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு சார் பில், மதுரையை ஆண்ட சுந்தரபாண்டியனின் சந்தி பூஜை விழா நடைபெற்றது. இக்கோவில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண் டியன் காலகட்டத்தில் விரி வாக்கம் செய்யப்பட்டது.

அவர் நினைவாக பாண் டியர்களின் செங்கோல், அரச முத்திரைகள், சின் னங்கள் வெளியிடப்பட் டன. கி.பி., 1180 முதல் 1480 கால கட்டத்தின் 50 பாண்டியர் கால நாணயங் கள் வரலாற்றுச் சான்று களுடன் அறிமுகப்படுத் தப்பட்டன.

பாண்டியர் பேரரசு சார்பில் விஜயநகர பேரரசின் சின்னம், ஒற்று மையின் அடையாளமாக விஜயநகர பேரரசின் அர விடு வம்சம் அனெகுந்தி சமஸ்தானத்தின் 19வது ராஜா கிருஷ்ணதேவராய ருக்கு வழங்கப்பட்டது.


விஜயநகர பேரரசு சார் பில் பாண்டியர்களின் மீன் சின்னம், பாண்டிய வம்சவ ளியினரும் முன்னாள் தமி ழகதடய அறிவியல் துறை இயக்குனருமான விஜயகு மாருக்கு வழங்கப்பட்டது. கிருஷ்ணதேவராயர் கூறுகையில், "இக்கோ யில் விஜயநகர பேரரசர் கர்நாடக இசையின் பிதாமகர் புரந்தரதாசர் இத்தல தாயா ருக்காக பாக்யத லட்சுமி பாரம்மா பாடல் பாடியுள் ளார்" என்றார். ராமராயர் காலத்தில் மறு சீரமைக்கப்பட்டது.


முன்னதாக பெருமாள் சன்னதியில் சுந்தர பாண் டியனை நினைவுகூரும் வகையில் சந்தி பூஜை நடந்தது. பாண்டியநாடு அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன், ஒருங்கி ணைப்பாளர் சண்முகவேல் பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மானாமதுரையில் ரயில் விபத்து பயணிகள் மீட்பு பாதுகாப்பு ஒத்திகை

**மானாமதுரை, பிப்.14:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ரயில் பெட்டிகள் தடம் புரண்டு விபத்து ஏற்பட்டால் பயணிகளை மீட்டு அவர்களுக்கு சிகிச்சையளித்து உயிரை காப்பாற்றுவது என்பது தொடர்பான பாதுகாப்பு ஒத்திகை வியாழக்கிழமை நடைபெற்றது.









மதுரை ரயில்வே கோட்டம் சார்பில் மானாமதுரை ரயில் நிலையத்தில் சரக்குகள் ஏற்றி இறக்கும் பிளாட்பாரத்தில் ரயில் பெட்டிகள் தடம் புரண்டு விபத்து ஏற்பட்டால் அதில் சிக்கி தவிக்கும் பயணிகளை மீட்டு அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உயிரை காப்பாற்றுவது எப்படி என்பது குறித்த பாதுகாப்பு ஒத்திகைக்காக இரு ரயில் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டது.

விபத்தில் ஒரு பெட்டி முழுவதுமாக கவிழ்ந்த நிலையிலும் மற்றொரு பெட்டி தண்டவாளத்தின் குறுக்கே நிற்பது போன்றும் கவிழ்ந்த பெட்டியில் தீ பற்றி எரிந்து அதை தீயணைப்புத்துறையினர் அணைப்பது போலவும் ரயில் பெட்டிக்குள் சிக்கி இருக்கும் பயணிகளை மீட்டு ஆம்புலன்ஸ் வேனில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி முதலுதவி சிகிச்சை அளிப்பது போன்றும் ஒத்திகை நடத்தப்பட்டது. மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் ஓம் பிரகாஷ் மீனா இதை பார்வையிட்டார்.

பாதுகாப்பு ஒத்திகையில் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர், தீயணைப்புத் துறையினர், ரயில்வே பாதுகாப்பு படையினர், ரயில்வேதுறை மற்றும் தமிழக அரசு மருத்துவக்குழுவினர், ரயில்வே பொறியாளர்கள் மற்றும் ஊழியர்கள், கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள், ரெட்கிராஸ் குழு,ஆம்புலன்ஸ் வாகன நிறுவனத்தினர் இணைந்து இந்த பாதுகாப்பு ஒத்திகையை மேற்கொண்டனர்.

அதன்பின் ரயில்வே கோட்ட மேலாளர் முன்னிலையில் இந்த குழுவினர் துறைவாரியாக ரயில் பெட்டிகள் தடம்புரண்டு விபத்து ஏற்பட்டால் மீட்புப் பணியில் எவ்வாறு செயல்பட்டு பயணிகளை காப்பாற்றுவது என்பது குறித்து விளக்கிக் கூறினர்.

## விஷ்ணுபதி புண்ணியகாலம் சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை , பிப்.14:** அருள்மிகு ஸ்ரீபூத நாராயணன் ஆலயத்தில் விஷ்ணுபதி புண்ணிய காலத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள்,வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, துளசி மாலைகளுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

பிரசாதம் துளசி தீர்த்தம், சடாரி, குங்குமம் வழங்கப்பட்டது ஏராளமான பக்தர்கள் ஸ்ரீபூத நாராயணரை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சுற்றுச்சூழல் கல்வி திட்டத்தின் கீழ் பறவைகள் கண்காணித்தல் நிகழ்வு



**கோவை, பிப்.14:** சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் துறை, பள்ளிக் கல்வித்துறை மற்றும் தமிழ்நாடு வனத்துறை அனுபவ கழகம் இணைந்து மாணவர்களுக்கு களப்பயணம் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

காடம்பாடி, நம்பியார் நகர் நகரவை நடுநிலைப்பள்ளி மற்றும் கீச்சாங்குப்பம் ஒன்றிய நடுநிலைப்பள்ளி , தேசிய பசுமை படை மாணவர்கள் 30 பேர் மற்றும் ஆசிரியைகள் திலகவதி, பால்மொழி, உலகாம்பிகை மூன்று பேர் விழுந்த மாவடி அலம் பகுதியில் பறவைகளை பார்வையிடுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டனர். சைபீரியா ரஷ்யா ஐரோப்பிய பகுதிகளில் இருந்து வந்திருந்த பறவைகளை பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.பின்னர் விழுந்தமாவடி காரப்பிடாகை சாலையில் நான்கு கிலோமீட்டர் இயற்கை நடைப்பயணம் (nature walk) மேற்கொண்டனர். பின்னர் தாண்டவ மூர்த்தி காடு கடற்கரையில் ஆமைக்குஞ்சு பொரிப்பகத்தைபார்வையிட்டு ஆமைகளின் முக்கியத்துவத்தை தெரிந்து கொண்டனர்.

வனத்துறையைச் சேர்ந்த வன சரகர் ஷியாம் சுந்தர், வனவர் அகிலா, வனக்காப்பாளர் ஆயிஷா, பசுமைத் தோழர் ஷானு, தேசிய பசுமை படை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்தமிழ் ஆனந்தன், உயிரியலாளர் பாசில் பாட்ஷா, மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தை சேர்ந்த அபிநயா மற்றும் இயற்கை ஆர்வலர்கள் மாணவர்களுக்கு பறவைகள் ஆமைகள் பற்றி எடுத்துக் கூறினர்.

## அம்பத்தூரில் எடப்பாடி பழனிசாமி 21-ந்தேதி பிரசாரம்

**அம்பத்தூர், பிப்.14:** அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்று ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.



அதன்படி வருகிற 21-ந்தேதி (சனிக்கிழமை) அம்பத்தூர் ராக்கி தியேட்டர் அருகே எடப்பாடி பழனிசாமி பிரசாரம் மேற்கொள்கிறார்.

இதற்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான வி.அலெக்சாண்டர் செய்து வருகிறார். இது தொடர்பாக அவர், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டமும் நடத்தினார்.

## மயிலாடுதுறையில் சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் மயூர நாட்டியாஞ்சலி விழா கோலாகல தொடக்கம்

**மயிலாடுதுறை,பிப்.14:** மயிலாடுதுறை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் மகாசிவராத்திரியை முன்னிட்டு பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பாருக்கு உணர்த்தும் உன்னத நோக்கத்தோடு ஆண்டுதோறும் மயூர நாட்டியாஞ்சலி விழா நடைபெற்று வருகிறது.

அதே போல இந்த ஆண்டும் மகா சிவராத்திரியை முன்னிட்டு திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 24-வது குருமாகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவான தேசிக பரமாசாரிய சுவாமிகளின் நல்லாசிகளோடு சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை நடத்தும் 20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா அருள்மிகு மயூரநாதர் ஆலயத்தில் சிறப்பாக தொடங்கியது.

மங்கள இசையுடன் தொடங்கிய மயூர நாட்டியஞ்சலி துவக்க விழாவிற்கு சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை அறங்காவலர் குழு தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார்.



அறங்காவலர் குழு துணை தலைவர் சிவலிங்கம், ஆலோசனைக்குழு தலைவர் பத்மஸ்ரீ லீலா சாம்சன், அறங்காவலர்கள் முத்துக்குமார், மோகன்ராஜ் மதியழகன், மருத்துவர். இரத்தின அருண்குமார், அசோக், பிச்சைக்கண்ணன், மருத்துவர். நீலகிருஷ்ணன், செந்தில்வேல், மருத்துவர். சண்முகம், குமரன், செந்தில்குமார், பாண்டுரங்கன், சங்கரி பரசுராமன், சாந்த குமார், அறக்கட்டளை பொருளாளர் ராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலைமாமணி, சங்கீதகலாநிதி மூத்த மிருதங்க கலைஞர் முனைவர் திருவாரூர் பக்தவச்சலம், தமிழக இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் மற்றும் செயலாளர் விஜயா தாயன்பன், தமிழ்நாடு பேக்கரி பேரடைஸ் தலைவர் பாண்டுரங்கன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். சப்தஸ்வரங்கள் அறக் கட்டளை தலைவர் இசைக் கலைமணி பரணிதரன் வரவேற்புரையாற்றினார். அறக்கட்டளை செயலாளர் வாத்திய கலைமணி மாயவரம் விஸ்வநாதன் 20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழாவில் பங்கேற்கும் கலைஞர்கள் மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகள் குறித்து விளக்கினார்.

கலைத்துறையில் சிறந்து விளங்கும் இசை கலைஞர்களுக்கும், நாட்டிய கலைஞர்களுக்கும் சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்த ஆண்டு கலை மற்றும் இசைத் துறையில் சிறந்து விளங்கி வரும் முனைவர் திருவாரூர் பக்தவச்சலம் அவர்களுக்கு லயஞான சாகரம் விருதும், நாட்டியகுரு மாயவரம் மகாலஷ்மி சிவகுமாருக்கு இளம் மயூர நட்டு வாங்க நன்மணி விருதும், நாதஸ்வர கலைஞர் கலைமுதுமணி ஆர். சுகுமாருக்கு மயூர நாதஸ்வர சுகஸ்வர இளவல் விருதும், நாதஸ்வர கலைஞர்கள் வி.எம். ரமேஷ், எஸ்.அருண்குமார், ஆர். மணிகண்டன் ஆகியோருக்கு மயூர நாதஸ்வர இளவல் விருதும், தவலிசை கலைஞர்கள் ரெட்டியூர் அ.செல்வம், சீர்காழி க.முருகேசன் ஆகியோருக்கு மயூர லயஞான தவிலிசை நன்மணி விருதும் வழங்கி பாராட்டப்பட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற முதல் நாள் மயூர நாட்டியாஞ்சலி விழாவில் சென்னை காவியாலயா குழுவினர், பெய்ஜிங் சீனா நாட்டிலிருந்து வந்திருந்த சங்கீதம் இந்தியா ஆர்ட்ஸ் குழுவினர், சென்னை பத்மஸ்ரீகலைமாமணி லீலா சாம்சன் குழுவினர், மயிலாடுதுறை மயிலை சப்தஸ்வரங்கள் நுண்கலை பயிற்சியக கலைஞர்கள் உள்ளிட்ட குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் ஏராளமான நாட்டியக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர். சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை துணை செயலாளர் அகஸ்டின் விஜய் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ஒருங்கிணைப்பு குழு செயலாளர் அரவிந்த் நன்றி கூறினார்.

பிப்ரவரி 12-ஆம் தேதி வியாழன் கிழமை தொடங்கிய மயூர நாட்டியாஞ்சலி விழா வெள்ளி,சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்கள் மாலை 5:30 மணி முதல் நள்ளிரவு வரை நடைபெற உள்ளது. இதில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, சீனா, லண்டன் போன்ற வெளிநாடுகளில் இருந்தும் 500-க்கும் மேற்பட்ட நாட்டிய கலைஞர்கள் பங்கேற்று பல்வேறு விதமான நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர்.

நாட்டியாஞ்சலி விழாவிற்கான ஏற்பாடுகளை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை நிர்வாகிகள் செய்துள்ளனர்.


Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹ 999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.



Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.



# கவிதை அரங்கம்!




எதிரி எவ்வளவு பெரியவர்
என்பது முக்கியமில்லை
எதிர்த்து நிற்கும் திறன்
எவ்வளவு பெரிது
என்பதே முக்கியம்


நேரங்கள்
நேர்மையானவை
அதனால் தான் யாருக்கும்
காத்திருப்பதில்லை

வாழ்க்கை எத்தனை
முறை உதைத்தாலும்
மீண்டு வர முடியும்
தன்னம்பிக்கை உன்
மந்திரமாக இருந்தால்

திறக்க முடியாத
பூட்டு எதுவும் இல்லை
தீர்க்க முடியாத
துன்பம் எதுவும் இல்லை

உன் சிறந்த
எழுத்துக்களை எழுது
அதன் மூலம்
உன் உணர்வுகள் மகிழும்

## வாழ்க்கை தத்துவம்...



முடிவில்லாத சவால்கள் இருந்தாலும்
மனதின் தெளிவு தான்
வாழ்க்கையின் திசைமாற்றி

முயற்சியின் வேர்கள்
ஆழமானால்
வெற்றியின் பழங்கள்
இனிமையோடு பழுக்கும்

நாள் முடிந்தபின்
மனதில் அமைதி இருந்தால் தான்
அந்த நாளின் வெற்றி உறுதி

வழி தெரியாமல் நின்றாலும்
முன்னே நடந்தால் தான்
புதிய பாதை உருவாகும்

காற்றைப் போல
சுதந்திரமாக நடந்து
நமக்கான பாதையை
நாம் உருவாக்குவதே
வாழ்க்கையின் அழகு

# அம்மாவின் அன்பு



ரமாவின் அம்மா அதிகம் படித்தவள் இல்லை. ஆனால் ஆய கலைகள் அறிந்தவர்.

திருமணம் முடிந்த பத்தாவது மாதமே ரமா பிறந்தாள். அதற்குப்பின் அவளுக்கு மகவு ஒன்றுமில்லை. அந்தக் காலத்தில் பத்து குழந்தைகள் பெற்றெடுக்கும் சமயம்.

அவர்கள் இந்தப் பெண்ணை சீரும் சிறப்புமாக வளர்த்தனர். மிக நன்றாக படிக்க வைத்தனர்.

அந்தப் பெண்ணும் நன்றாக படித்தாள். பாட்டு, கை வேலை, சமையல் எல்லாவற்றிலும் முதன்மையாக இருந்தாள். பார்ப்பதற்கு அழகான பதுமை போல் இருந்தாள்.

அவளின் படிப்புக்கேற்ப பெரிய கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டி பதிவு செய்தனர்.

ஆனால் அவர்கள் கட்ட வேண்டிய சரியான தொகையை கட்டுவதற்கு தயாராக இருந்தார்கள்.

ஆனால் உள்ளிருந்த பிரச்னையால் இந்தப் பெண்ணிற்கு சீட் தர மறுத்து விட்டார்கள்.

பெண்ணை நிச்சயம் அந்தக் கல்லூரியில் சேர்த்தே தீருவேன் என்ற வைராக்கியத்துடன் ரமாவின் தாயார் நடையாய் நடந்தார்கள்.

கல்லூரி நிர்வாகம் சரியாக காரணம் சொல்லவேயில்லை. தங்களின் இஷ்டம் சீட் கொடுப்பது என்று வாதிட்டார்களே தவிர சீட் கொடுக்க மறுத்து விட்டார்கள். இன்னும் இரண்டு பெண்களுக்கும் இதே போல் காரணம் இல்லாமல் நிராகரித்தார்கள்.

பெண்கள் பள்ளி இறுதி படிப்பு போவது அந்தக் காலத்தில் மிகுந்த சிரமம்.


இவர்கள் நல்ல மதிப்பெண் பெற்று நல்ல கல்லூரியில் சேர அனுமதி கிடைக்க வில்லை. சரியான காரணமும் கல்லூரி நிர்வாகம் சொல்லவில்லை.

மகளின் நலம் வேண்டி ரமாவின் தாயார் கல்லூரி முன்பு உண்ணாவிரதம் இருந்து வந்தார் . கல்லூரி நிர்வாகம் முதல் மூன்று நாட்கள் இதை கண்டு கொள்ளவே இல்லை.

அதற்குப் பின் அப்போதிருந்த நாளிதழ் ஒன்றில் சிறிய செய்தியாக வந்தவுடன் மக்களுக்கு தெரியத் தொடங்கியது. அப்போதும் பார்த்துக் கொள்ளலாம் என்றிருந்தனர். ஐந்தாவது நாள் தான் அரசின் பார்வைக்குப் போன பிறகு கொஞ்சம் அச்சம் கொண்டனர்.

ஆனாலும் ஆறாவது நாள் மூவருக்கும் கல்லூரியில் இடம் கொடுக்க அரசாங்கம் பரிந்துரைத்தது . இவர்களுக்கு அங்கு படித்து முடிக்கும் வரை கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டது.

ரமா தாயின் முயற்சியால் மிகவும் நன்கு படித்து அந்தக் கல்லூரியின் முதல்வரானார்.



ஹேமா வாசுதேவன்
சென்னை



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*அம்மா:* என்னடா... இன்னிக்கு ஸ்கூல்ல இருந்து இவ்வளவு சீக்கிரமா வந்துட்டே?

*பையன்:* எங்க மிஸ் ஒரு கேள்வி கேட்டாங்க, நான் மட்டும் தான் பதில் சொன்னேன்.

*அம்மா:* (சந்தோசமாக) என்ன கேள்வி கேட்டாங்க?

*பையன்:* யார்ரா அது மிஸ் மேல சாக்பீஸ் அடிச்சதுன்னு கேட்டாங்க.



# தினம் ஒரு சமையல்



## சுண்டைக்காய் தக்காளி தொக்கு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| பச்சை சுண்டைக்காய் | -1 கைப்பிடி |
| பெரிய வெங்காயம் | -2 |
| தக்காளி பழம் | -3 |
| புளி | -சிறிய நெல்லிக்காய் அளவு |
| மிளகாய்த்தூள் மல்லி தூள் மஞ்சள் தூள் | -தேவைக்கேற்ப |
| நல்லெண்ணெய் | -1/4 கப் |
| உப்பு | |

செய்முறை:



சுண்டைக்காயை இடிக்கல் வைத்து தட்டி தண்ணீரில் நன்றாக கழுவவும்.

கடாயை ஸ்டவ்வில் வைத்து என்னை விட்டு காய்ந்ததும் நறுக்கிய வெங்காயம் மற்றும் சுண்டைக்காய் சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.

இதில் மிளகாய் தூள் மஞ்சள் தூள் மல்லித்தூள் சேர்த்து தக்காளியை நறுக்கி சேர்த்து என்னை மேலே பிரிந்து வரும் வரை வதக்கி அதன் பிறகு தேவையான அளவு புளி கரைசல் மற்றும் தண்ணீர் விட்டு சுண்டைக்காய் வெந்தபின் தேவைக்கேற்ப உப்பு சேர்த்து பரிமாறலாம்.

## மணித்தக்காளி பயன்கள்



மணத்தக்காளி கீரை, வாய்ப்புண், குடல் புண், வயிற்று வலி போன்ற செரிமான பிரச்சனைகளை சரிசெய்வதோடு, சளி, இருமல், உடல் சூடு, இரத்த சோகை, கல்லீரல் பிரச்சனைகள், அலர்ஜிகள் மற்றும் தோல் நோய்களுக்கும் நிவாரணம் அளித்து, உடலுக்கு பலம் சேர்க்கிறது; இதனை கீரையாகவோ, பழமாகவோ அல்லது சாறாகவோ சாப்பிடலாம்.

முக்கியப் பயன்கள்:

செரிமான மண்டலம்: வாய்ப்புண், குடல் புண், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, மலச்சிக்கல் போன்றவற்றை நீக்கும்.

சுவாச மண்டலம்: சளி, இருமல், கபம், சுவாசக் கோளாறுகள், மூக்கடைப்பு ஆகியவற்றைப் போக்கும்.

இரத்த சோகை: இரத்த சோகையை சரிசெய்து, இரத்தத்தை சுத்திகரிக்க உதவும்.

கல்லீரல் & மண்ணீரல்: கல்லீரல் மற்றும் மண்ணீரல் வீக்கத்தைக் குறைக்கும்.

உடல் சூடு: உடல் சூட்டைக் குறைத்து, உடல் வெப்பத்தைச் சீராக்கும்.

தோல் நோய்கள்: தோல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, அலர்ஜி போன்ற பிரச்சனைகளுக்கு உதவும்.

இதயம்: இதயத்திற்கு பலம் சேர்க்கும் (டானிக்).

எப்படிப் பயன்படுத்துவது:

பச்சையாக: இலைகளை மென்று சாப்பிடலாம் (வாய்ப்புண் போன்றவற்றுக்கு).

சாறாக: கீரை சாற்றை பழரசத்துடன் கலந்து அருந்தலாம் (வயிற்றுப் பிரச்சனைகளுக்கு).

சமையல்: குழம்பு, கூட்டு போன்ற உணவுகளில் சேர்த்து உண்ணலாம்.

மணத்தக்காளி கீரை ஒரு சிறந்த மூலிகை உணவு. இதனை உணவில் சேர்த்து ஆரோக்கியத்தைப் பேணலாம்.

ஆக்ஸிஜனேற்ற பண்புகள்

மணத்தக்காளி கீரையில் ஃபிளாவனாய்டுகள், ஃபீனாலிக் கலவைகள் மற்றும் வைட்டமின்கள் ஏ மற்றும் சி போன்ற ஆக்ஸிஜனேற்றங்கள் நிறைந்துள்ளன. இந்த ஆன்டிஆக்ஸிடன்ட்கள் தீங்கு விளைவிக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களை நடுநிலையாக்க உதவுகின்றன மற்றும் ஆக்ஸிஜனேற்ற சேதத்திலிருந்து உடலின் செல்களைப் பாதுகாக்கின்றன.

மணத்தக்காளி கீரை அதன் செரிமான நன்மைகளுக்கு பெயர் பெற்றது. இது செரிமானத்திற்கு உதவுவதாகவும், ஆரோக்கியமான குடல் இயக்கங்களை மேம்படுத்து வதாகவும், மலச்சிக்கலை போக்குவதாகவும் நம்பப்படுகிறது. இது பசியை மேம்படுத்தவும், வயிற்றுக் கோளாறுகளைப் போக்கவும் உதவும்.

மணத்தக்காளி கீரையில் உள்ள சில உயிர்ச்சக்தி கலவைகள் அலர்ஜி எதிர்ப்பு பண்புகளுக்கு பங்களிக்கக்கூடும். இந்த கீரை சில நேரங்களில் உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கவும், அலர்ஜி நிலைகளுடன் தொடர்புடைய அறிகுறிகளைப் போக்கவும் பயன்படுகிறது. மணத்தக்காளி கீரையில் அதிக வைட்டமின் சி இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தன்மை கொண்டதாக கருதப்படுகிறது. இது நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தவும், தொற்று மற்றும் நோய்களிலிருந்து பாதுகாக்கவும் உதவும்.

# ஆறு நாட்களில் வித் லவ் படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா




டூரிஸ்ட் பேமிலி படத்தின் மூலம் அறிமுக இயக்குநராக தமிழ் சினிமாவில் களமிறங்கியவர் அபிஷன் ஜீவிந்த். முதல் படத்திலேயே மாபெரும் வெற்றி கண்ட இயக்குநர் அபிஷன் தற்போது வித் லவ் படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமாகியுள்ளார்.

இப்படத்தை அறிமுக இயக்குநர் மதன் இயக்க சௌந்தர்யா ரஜினிகாந்த் தயாரித்திருந்தார். மேலும், மலையாள நடிகை அனஸ்வரா ராஜன் இப்படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார்.

காதல் கதைக்களத்தில் உருவாகி கடந்த வாரம் வெளிவந்த வித் லவ் படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. இதனால், முதல் நாளில் இருந்தே வசூலில் இப்படம் பட்டையை கிளப்பி வருகிறது.

இந்த நிலையில், ஆறு நாட்களை கடந்திருக்கும் வித் லவ் படம் உலகளவில் ரூ. 16.8 கோடி வசூல் செய்துள்ளது. இனி வரும் நாட்களிலும் இப்படத்தின் வசூல் வேட்டை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.






இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கக்கூடிய சல்மா அருண், தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை அதில் தொடர்ந்து பதிவு செய்து வருகிறார். அந்த வகையில், தற்போது இவர் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் இதோ..

# சினிமாவில் என்ட்ரியாகும் பிக்பாஸ் புகழ் தாமரை... யாருடன் நடிக்கிறார் தெரியுமா?




விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் ரியாலிட்டி ஷோக்கள் மூலம் எத்தனையோ கலைஞர்கள் தங்களது வாழ்க்கையில் மிகப்பெரிய வெற்றியை கண்டுள்ளனர்.

அப்படி பல கலைஞர்கள் வாழ்க்கையில் முன்னேற ஒரு சிறந்த நிகழ்ச்சியாக அமைந்துள்ளது பிக்பாஸ். ஆரம்பத்தில் இந்த நிகழ்ச்சி குறித்த புரிதல் தமிழக மக்களிடம் இல்லை என்றாலும் இப்போது நன்றாக தெரிந்துகொண்டனர்.


பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நன்கு விளையாடினால் மக்களிடம் போய் சேரலாம் என்ற எண்ணம் பலருக்கும் உள்ளது. அப்படி இந்த பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் எங்கோ ஒரு கிராமத்தில் வசித்து வந்த தாமரை என்பவர் மக்களுக்கு பரீட்சயமானவர் ஆனார்.

20 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டுப்புற கலைஞராக இருந்தவருக்கு பிக்பாஸ் பெரிய எதிர்க்காலத்தை தேடிக்கொடுத்துள்ளது என்றே கூறலாம்.

மலையாள இயக்குனர் மாதவ் ரமாதாசன், சரத்குமார், இந்திரஜித் ஜெகன், தேவிகா சதீஷ், வையாபுரி என பலரை வைத்து ஆழி என்ற படத்தை இயக்கியுள்ளார். இந்த படத்தில் நகைச்சுவை நடிகர் வையாபுரிக்கு ஜோடியாக தாமரை செல்வி நடித்துள்ளாராம்.

இப்படம் வரும் பிப்ரவரி 27ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளதாம்.

# தவறிய ஒரு வினாடி




அறையின் ஒரு மூலையில், பதற்றம் மட்டுமே தனது கடிகாரமாகச் செயல்பட, தருண் அவசரமாகத் தனது சாக்ஸை மாட்டிக்கொண்டிருந்தான். புதிய வெள்ளைச் சட்டை அவனது சுறுசுறுப்பைக் காட்டினாலும், இன்று எப்படியாவது கிளம்பிச் செல்ல வேண்டும் என்ற ஒரு அசாத்திய உந்துதலின் சூடு அவன் முகத்தில் தெரிந்தது. ஒவ்வொரு நொடியும், பேருந்துக்காகத் துடித்துக்கொண்டிருந்தது அவன் மனம்.

தருண் பரபரப்புடன் கதவை நோக்கி நடந்தான். "என்ன, தருண்! பள்ளிக்குக் கிளம்பிட்டியா? இல்லைன்னா சாப்பிட்டு விட்டு போ," என்று தன் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டே கேட்டார் பழனி. அவரது குரலில் அன்றாட அக்கறை இருந்தது. தருணுக்குக் கோபம் உச்சந்தலைக்கு ஏறியது. அந்தப் பிடிவாதத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்கு எரிச்சல் பொத்துக்கொண்டு வந்தது.

"போதும்ப்பா! எத்தனை தடவை சொல்றது? 'சும்மா டெய்லி இந்தத் தொல்லையைத் தாங்க முடியல! வாய்மூடிட்டு இரு!'" வார்த்தைகள் வெடித்துச் சிதறின. எரிச்சலுடன் உதட்டைப் பிதுக்கிவிட்டுத் திரும்பினான்.

அவனது கோபத்தின் வேகத்தில், முன்னால் இருந்த மர வாசக்காலின் விளிம்பைக் கவனிக்கவில்லை. "டொம்!" அவன் நெற்றியின் மையத்தில் வாசக்காலின் கடினமான முனையில் பலமாகக் மோதியது. ஒரு சில்லிடும் வலி ஐஸ் கட்டியைப் போலப் பரவ, அவன் கண்களில் கணம் மின்னியது. வாசக்காலில் சிந்திய ஒரு சொட்டு இரத்தம், தரையில் ஒரு சிறிய, செந்நிறப் புள்ளியை உருவாக்கியது. அது, அன்றைய நாளின் கொடூரமான விபத்துக்கான முதல் எச்சரிக்கைச் சத்தம்.

பழனி சோபாவைத் தாண்டித் துள்ளினார். "டேய்! என் பேச்சைக் கேட்காம நீ போன, அதான் இடிச்சுக்கிட்ட! இப்பவாவது என் பேச்சைக் கேளு! இன்னைக்கு வேண்டாம்!"

தந்தையின் கண்களில் இருந்த உண்மையான பயம், தருணின் வேகத்தை ஒரு வினாடி தயங்க வைத்தது. ஆனால், பேருந்து வந்து விடுமே என்ற எண்ணம் அவனைத் தின்ன, அந்தத் தயக்கத்தை மறந்தான். வலி தாங்க முடியாமல் தண்ணீரை விழுங்கி, சோபாவில் அமர்ந்தான். நெற்றியில் ஏற்பட்ட வீக்கம், அவன் கவனத்தைச் சிதைத்தது.

வீடு முழுவதும் பயங்கர அமைதி சூழ்ந்திருந்தது. தூரத்தில் இருந்து ஒரு கனமான டீசல் எஞ்சினின் இரைச்சல் மெல்ல மெல்ல நெருங்கியது.

"பீ...ப்! பீ...ப்!" அதுதான் அவனது பேருந்து!

அது ஒருமுறை ஹாரன் அடித்து, சத்தம் அடங்குவதற்குள், பேருந்து மெல்லச் சாலையில் நகரும் சத்தம் தெளிவாகக் கேட்டது. தருண் அலறி அடித்தான். அவன் சோபாவில் இருந்து எழுந்த வேகத்தில் கால்கள் தடுமாறின. புத்தகப்பை தோளில் குலுங்க, பதற்றத்துடன் ஓடினான். சாலையில், மஞ்சள் நிறப் பேருந்து வேகம் எடுத்திருந்தது. தருண் ஒரு மின்னல் போல அதன் பின்னால் ஓடினான். கடைசி முயற்சியாக, நகர்ந்து கொண்டிருந்த பேருந்தின் பின் கம்பியை நோக்கித் தன் கையை நீட்டினான்.

அப்போது, அவனது ஓட்டத்தின் வேகமும், நெற்றியில் இடித்த வலியின் சோர்வும் சேர்ந்து, அவன் கால்களைப் பலவீனப்படுத்தின. அவன் கால் வழுக்கிற்று.

தருண், ஒரு பலவீனமான காகிதப் பொம்மை போல, சாலையின் கடினமான, சூடான கான்கிரீட் தரையில் தலைகீழாக விழுந்தான். டிரைவர் பதறியடித்து பிரேக் போட்டார். வீட்டிற்குள் இருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த பழனி, ஒரு சிலை போல உறைந்து போனார். "என் கண்ணே...!" என்று நெஞ்சில் அறைந்து அழுதார்.

சாலையில் கிடந்த தருணின் வெள்ளைச் சட்டை, ரத்தத்தாலும், கூர்மையான சிறு கற்களாலும் கிழிக்கப்பட்டு, மஞ்சள் நிற மண்ணில் கிடந்தது.

ஆம்புலன்ஸ் சைரனின் ஒலியும், சாலையில் கிடந்த அவனது காயமும், அங்கே பழனி மனதில் ஒரு கேள்வியைப் புதைத்தது: "வீணாகத் தனது மகனைத் தடுத்து, அவனது அவசர விபத்துக்கு நானே வழி வகுத்து விட்டேனே," என்று அவர் கதறி அழுதார்.

ஆம்புலன்ஸின் படுக்கையில், நெற்றியில் ஒட்டப்பட்டிருந்த சின்னக் கட்டோடும், முழங்கையில் வழிந்த ரத்தத்தோடும் தருண் கண்களை மூடியிருந்தான். பழனி மெதுவாக அவனது கைகளைப் பற்றினார். "தருண்... என் கண்ணே..."

தருண் மெல்லக் கண்களைத் திறந்தான். தன் தந்தையின் கண்களில் நிறைந்திருந்த உண்மையான கண்ணீரைக் கண்ட தருண், எந்தக் கோபமும் இல்லாமல், அமைதியாகத் தனது கைவிரல்களால் தந்தையின் கையை இறுக்கினான்.



-டாக்டர் ப.பாண்டியராஜன்
மதுராந்தகம்

# புண்ணியம் தேடுவோம்



டிசம்பர் மாதம் முதல் நாள்,தமிழ் மாதம் கார்த்திகை 16 ம் நாள் விருச்சிக மாதம் 15 ம் நாள் குருவாயூர் ஏகாதசி கைசிக ஏகாதசி ,மோக்ஷ ஏகாதசி, பிரபோதினி ஏகாதசி என பல பெயர்களில பக்தர்களால் அனுசரிக்கப் படும் தினம்.

ஏகாதசி என்று அழைக்கப்படும் நாளானது, பௌர்ணமி மற்றும் அமாவாசை நாட்களுக்கு இடையிலே பதினொன்றாம் நாளைக் குறிப்பதாகும். இது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வரும், முக்கியமான விரத நாளாகும். வருடத்தில் மொத்தம் 24 ஏகாதசிகள் நிகழ்கின்றன. குருவாயூர் ஏகாதசி நாள் கார்த்திகை/விருச்சிக மண்டல காலத்தில் வரும் ஏகாதசியாகும். இந்த புண்ணிய தினத்தின் முக்கியத்துவத்தைக் காண்போம்.

க்ஷீரசாகரத்தில் அனந்தசயனனாக பள்ளி கொள்ளும் பகவான் யோகநித்திரையிலிருந்து எழுந்து லஷ்மி தேவியோடு நம்மை அனுக்கிரகிக்கும் மகா புண்ணிய தினம்.

அறநெறியையும், அறநெறியில் உள்ளவர்களையும் காக்கவும்,அதர்மத்தையும், அதர்ம வழியில் உள்ளவர்களையும் அழிக்கவும் பகவான் அவதாரம் செய்கிறார்.

அவ்வண்ணமே பூரண அவதாரம் எடுத்த ஶ்ரீ கிருஷ்ண பகவான் பல அவதார லீலைகள் செய்த புண்ணிய தினம்.

பகவத்கீதையை அருச்சுனனுக்கு பகவான் உபதேசம் செய்த புண்ணிய தினம்.

தேவேந்திரன் சுரபியாகிய காமதேனுவுடன் பிருந்தாவனத்தை அடைந்து பகவானை துதித்தும், காமதேனு பால் சுரந்து கோவிந்தாபிஷேகம் நடத்திய மகா புண்ணிய தினம்.

குருவாயூர்க்ஷேத்திரப் பிரதிஷ்டா தினம். அத்வைதத்தின் குருவும், சைவ அவதாரமுமான ஆதிசங்கரர் குருவாயூர் கோவிலில் வந்து, இன்று நடைபெறும் பூஜா நிஷ்டைகளை உருவாக்கிக் கொடுத்த மகா புண்ணிய தினம்

குருவாயூர் கோவிலில் தாந்த்ரீக சடங்குகள் ஒன்றும் இல்லாமல் பகவான் பக்த ஜனங்களை நேரில் வந்து அனுக்கிரகம் செய்ய வெளியே வரும் புண்ணிய தினம்.

பக்தரில் உத்தமர்களாகிய மேல்பத்தூர், பூந்தானம், ஆதிசங்கரர், குரூரம்மா, வில்வமங்கலம் சுவாமிகள் போன்றவர்களுக்கு பகவத் தரிசனம் கொடுத்த மகா புண்ணிய தினம்.

செம்பை வைத்தியநாத பாகவதருக்கு இழந்த குரலை மீண்டும் பகவான் அருளிய மகா புண்ணிய தினம்.

செம்பை வைத்தியநாத பாகவதர் தனது சீடர்களுடன் குருவாயூரில் வந்த சங்கீத ஆராதனை நடத்திய மகா புண்ணிய தினம். இன்றும் ஆராதனை நடந்து வருகிறது.

குருவாயூர் ஶ்ரீகோவில் இன்று முழுவதும் தரிசனத்துக்காக திறந்திருக்கும் புண்ணிய தினம்.

பக்தர்கள் ஆராதிக்கும் , பகவானின் அருள் கொண்ட குருவாயூர் கேசவன் என்னும் யானை பகவானை அடைந்த தினம்.

மேல்பத்தூர் பட்டத்திரிப்பாடு தான் எழுதிய நாராயணீயம் என்னும் கிரந்தத்தை பகவானுடைய சன்னதியில் சமர்ப்பணம் செய்த மகா புண்ணிய தினம்.

கார்த்திகை — வளர்பிறை ஏகாதசி — பிரபோதின ஏகாதசி-- கைசிக ஏகாதசி — அனைத்துப் பழங்களையும் பகவானுக்கு நிவேதனம் செய்து நவ வித பக்தியால் இறைவனை வேண்டிக் கொண்டால் இறையருளுடன் மங்கல வாழ்வு மலரும்.

ஏகாதசி விளக்கு என பதினைந்து நாட்கள் குருவாயூர் கோவிலில் கோலாகலமாக நடக்கும் இந்த குருவாயூர் ஏகாதசி மகத்துவம் அறிந்து, விரத விதிகளை பாராட்டி அனுசரித்து 'நான்''எனது'என்ற அகந்தை இல்லாமல் 'சர்வம் கிருஷ்ணார்ப்பணம்' என்ற கோவிந்த நாமத்தை வணங்கி நற்கதி பெறுவோம்.



சோபனா
விச்வநாதன்.

# தினம் ஒரு தலைவர்கள் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் வரலாறு


ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (6 சூன் 1829 31 சூலை 1912), இங்கிலாந்தின் கென்ட் நகரில் ஜோசப் - மரியா தம்பதியின் எட்டாவது குழந்தையாக ஆலன் ஆக்டேவியன் ஹியூம் பிறந்தார். தந்தை ஜோசப் ஹியூம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் ஒரு தீவிர உறுப்பினராக இருந்தவர். கல்லூரிப் படிப்பை முடித்ததும் ஆலன் ஓர் ஐ.சி.எஸ். அதிகாரியாகத் தேர்வு பெற்று இந்தியாவில் 1850-ல் உத்தரப் பிரதேசத்தில் பணியைத் தொடங்கினார். இந்தியாவில் காங்கிரஸ் கட்சியைத் துவக்கக் காரணமானவர்களில் இவரும் ஒருவர். எட்டாவா நகரில் 1856-ல் ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை ஆலன் தொடங்கினார். ஆலன் ஆற்றிய பணியைப் போற்றும் வகையில் பிற்காலத்தில் அந்தப்பகுதி "ஹியூம் கஞ்ஜ்' என்று வழங்கப்பட்டு அது மருவி தற்பொழுது "ஹோம் கஞ்ஜ்' என அழைக்கப்படுகிறது.

1857-ல் சிப்பாய்க் கலகத்துக்குப் பிறகு ஆங்கில மேலதிகாரிகளின் 1859 ஜனவரி சுற்றறிக்கையின்படி இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் திட்டத்தை உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. அந்தச் சுற்றறிக்கைக்குப் பதிலாக 1859 மார்ச் 30-ம் தேதியிட்ட கடிதத்தில் ஆலன் பின்வரும் கருத்தை வலியுறுத்தினார்: ""இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் முயற்சி அதிகமாக வேண்டும் என்று இதற்கு முன் கிழக்கு இந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் போட்ட உத்தரவு உள்ளது.

அதன்படி தொடர்ந்து கல்வி அறிவைப் பரப்புவது நல்லது. கல்வி அறிவு மூலம் மக்களுக்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்பட்டால்தான் அது அரசுக்கு நன்மை பயக்கும். அறியாமையில் மக்களை அடக்கி வைப்பதால் கடைசியில் எதற்கும் அடங்காத ஆவேசம் மக்களுக்கு ஏற்பட்டு எதிர்ப்படும் எல்லாக் கட்டுப்பாடுகளையும் அவர்கள் உடைத்தெறிந்துவிடுவார்கள் என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் இருக்கின்றன.

மக்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை காட்டி அவர்களுடைய மதிப்பையும், நம்பிக்கையையும் பெறுவதில்தான் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

ஆங்கில அரசாங்கம் மேற்கொண்ட பற்பல சீர்கேடான நடவடிக்கைகளை ஆலன் வலுவாக எதிர்த்தார். எடுத்துக்காட்டாக, மதுக்கடைகளை ஆங்காங்கு விரிவுபடுத்தி அதனால் கிடைக்கும் ஏராளமான வருவாயை அரசாங்கம் ஆண்டுதோறும் பெருக்கிக் கொள்வதை ஆலன் கண்டித்தார். அதனால், குடிப்பழக்கத்துக்கு அடிமையான ஏழைகளின் குடும்பங்கள் படும் துன்பங்களைத் தவிர்க்கும் வகையில் அரசாங்கம் தனது வரி வசூலை மட்டும் கவனித்துக் கொண்டிராமல் மக்களின் நலன்களையும் கவனிக்க வேண்டும் என்று 1860 மே மாதத்தில் ஆலன் எழுதிய அறிவிப்பில் தெரிவித்திருந்தார்.



ஆலன் தந்த ஆலோசனைகளையும், முற்போக்கான திட்டங்களையும் அப்பொழுது இருந்த ஆங்கில மேலதிகாரிகள் பலர் புறக்கணித்தாலும், வைஸ்ராய் பதவிக்கு வந்த மேயோ பிரபு, ரிப்பன் பிரபு போன்றோர் ஆலனின் ஆலோசனைகளை வரவேற்றார்கள். விவசாயத் துறையை மேம்படுத்த ஆலன் அளித்த ஆய்வறிக்கைகளைப் பார்த்த மேயோ பிரபு, அவற்றை நிறைவேற்ற ஆலன்தான் பொருத்தமானவர் என்று முடிவெடுத்து 1870-ல் ஆங்கில அரசின் வைஸ்ராய் தலைமையகத்தில் விவசாயம், வருவாய், வணிகம் உள்ளிட்ட துறையில் செயலாளராக ஆலன் நியமிக்கப்பட்டார்.

1876-ல் வைஸ்ராயாக வந்த லிட்டன் பிரபுவுடன் ஆலனால் பல பிரச்னைகளில் ஒத்துப்போக இயலவில்லை. குறிப்பாக, வெளிநாட்டு வணிக ஒப்பந்தங்களில் இந்தியாவுக்கு ஏற்படவிருந்த பெரும் இழப்புகளை ஆலன் சுட்டிக்காட்டினார்.

மேலும், 1876-78-ல் பெரும் பஞ்சம் ஏற்பட்டு ஒரு கோடி மக்கள் மாண்டனர். அதற்கான தீர்வு ஆலன் தந்த பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவை லிட்டன் பிரபுவுக்குப் பிடிக்கவில்லை. உடனே, ஆலன் செயலாளர் பணியிலிருந்து பதவியிறக்கம் செய்யப்பட்டு அப்பொழுது இருந்த வடமேற்கு மாகாணத்தின் (தற்கால உத்தரப்பிரதேசம்) வருவாய்த் துறை வாரியத்தின் இளநிலை உறுப்பினராக அனுப்பப்பட்டார். அப்பொழுது இருந்த பத்திரிகைகள் அனைத்தும் கடுமையான முறையில் மிக நேர்மையான ஓர் அதிகாரி ஆட்சியாளர்களால் மிக மோசமாக நடத்தப்பட்டார் என்று கண்டித்தன.

1882 ஜனவரி முதல் நாளில் தமது அரசாங்கப் பதவியை ஆலன் துறந்துவிட்டார். அதன் பிறகு இந்திய மக்களுக்குத் தாம் செய்ய வேண்டிய கடமை ஒன்று அவருக்கு இருந்தது. அது, ஆங்கில அரசாங்கம் இந்தியர்களுக்குச் செய்து வரும் அநீதிகளை வெளிப்படுத்தித் தக்க முன்னேற்றத்தைத் தர வேண்டும் என்பதை வலியுறுத்த இங்கிலாந்து சென்று, அங்கு இந்தியா பற்றிய ஓர் அமைப்பை உண்டாக்க அவர் திட்டமிட்டார். ஆனால், வில்லியம் வெட்டர்பர்ன் போன்று இருந்த நண்பர்கள் இங்கிலாந்துக்குச் செல்வதைவிட இந்தியாவிலேயே இந்திய மக்களுக்காக ஓர் அமைப்பை உருவாக்குவது நல்லது என்று ஆலோசனை கூறினார்கள். இந்தியாவின் உரிமைகளை நிலைநாட்டவும், இந்தியாவை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்லவும் தக்கதொரு அமைப்பை உருவாக்க ஆலன் எடுத்த முதல் முயற்சி, கோல்கத்தா பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளுக்கு 1883, மார்ச் 1-ல் சிறந்ததொரு வெளிப்படையான வேண்டுகோளை வெளியிட்டார்.

# பட்ஜெட் மீதான விவாதத்தில் நிர்மலா சீதாராமன் உரைக்கு பிரதமர் மோடி பாராட்டு





**புதுடெல்லி, பிப்.14:**

மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் உரையாற்றினார்.

அதைப் பாராட்டி எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது:

”நாட்டின் பொருளாதார மாற்றத்துக்கு இந்தாண்டு பட்ஜெட் எவ்வாறு தனது பங்களிப்பை அளிக்கும் என்பதை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விரிவாக விளக்கினார்.

விரைவான சீர்திருத்தங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு, திறன்மேம்பாடு, அடுத்த தலைமுறை கட்டமைபுக்கான நடவடிக்கைகள், சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கான முயற்சிகள், கல்வி மற்றும் இதர துறை நடவடிக்கைகளை அவர் எடுத்துரைத்தார். முதலீட்டு செலவினம் ரூ.17.1 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 4.4 சதவீதம் என்றும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

# “மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறுவது பொய்” காங். பொதுச் செயலர் பிரியங்கா காந்தி மறுப்பு

**புதுடெல்லி, பிப்.14:**

நாடாளுமன்றத்தில் நடந்ததாக மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறுவது பொய் என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் பிரியங்கா காந்தி மறுப்பு தெரிவித்துள்ளார்.



கடந்த பிப்ரவரி 4ம் தேதி மக்களவையில் பிரதமரை சூழ்ந்து கொண்டு காங்கிரஸ் எம்.பி.க்கள் தாக்க திட்டமிட்டனர் என்று சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்திருந்தார். இந்நிலையில் மக்களவையில் காங்கிரஸ் பெண் எம்.பி.க்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் மற்றும் அவைத் தலைவர் ஓம் பிர்லா அறைக்குள் சென்று வாக்குவாதம் செய்தது ஆகிய வீடியோக்களை மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு வெளியிட்டுள்ளார். மேலும், 20-க்கும் மேற்பட்ட காங்கிரஸ் எம்.பி.க்கள் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவின் அறைக்குள் நுழைந்து அவரை அவதூறாகப் பேசி மிரட்டியதாக கிரண் ரிஜிஜு குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து பிரியங்கா காந்தி நேற்று கூறியதாவது: சபாநாயகர் ஓம் பிர்லா அறைக்குள் சென்ற நாங்கள் யாரையும் திட்டவில்லை. 2 எம்.பி.க்கள் மட்டும் கிளர்ந்தெழுந்தனர். அவர்கள் அதை வெளிப்படுத்தினர். நான் அவர்களை ஊக்குவித்ததாக மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறுகிறார். இது முழுக்க முழுக்க பொய். நான் அமைதியாக அமர்ந்திருந்தேன். இறுதியில், நான் சில விஷயங்களை அமைதியாகச் சொன்னேன். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு எதிராக வழக்குகள் தொடருதல் உள்ளிட்ட அனைத்தையும் அவர்கள் செய்வார்கள். ஆனால் எதுவும் ராகுல் காந்தியை பாதிக்க போவதில்லை. இவ்வாறு பிரியங்கா காந்தி கூறினார்.

இதேபோல இசையை ஒலிக்கும் சாலைகள் ஹங்கேரி, ஜப்பான், தென்கொரியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இதுவே முதல் பரிசோதனை முயற்சி ஆகும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டில்லி மாநகராட்சி எம்டிஎஸ் ஊழியா்களுக்கு சம ஊதியம் அறிவிப்பு: பட்ஜெட்டில் ரூ.50 கோடி ஒதுக்கீடு

**புதுடெல்லி, பிப்.14:**

டில்லி மாநகராட்சி ஊழியர்களின் நீண்டகால கோரிக்கையை நிவர்த்தி செய்யும் வகையில், எம்டிஎஸ் பிரிவின் கீழ் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சம ஊதியம் வழங்குவதாக தில்லி அரசு அறிவித்துள்ளது.

இந்த முடிவு, சுமார் 4,000 ஊழியர்களுக்கு பயனளிக்கும் என்றும் இதற்காக மாநகராட்சி பட்ஜெட்டில் ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

செய்தியாளர்கள் சந்திப்பில் இந்த அறிவிப்பை வெளியிட்ட மாநகராட்சி மேயர் ராஜா இக்பால் சிங் கூறுகையில், ‘சம ஊதியம் என்பது பல ஆண்டுகளாக எம்டிஎஸ் ஊழியர்களால் தொடர்ந்து எழுப்பப்படும் கோரிக்கையாகும். இப்போது, அவர்களுக்கு அளித்த வாக்குறுதியை பாஜக அரசு நிறைவேற்றியுள்ளது. இது மாநகராட்சி ஊழியர்கள் மீதான பாஜகவின் அர்ப்பணிப்பு மற்றும் உணர்திறனை பிரதிபலிக்கிறது. முந்தைய அரசு உத்தரவாதங்களை மட்டுமே வழங்கி வந்த நிலையில் பாஜக அரசு அதை செயல்படுத்தி காட்டியுள்ளது’ என தெரிவித்தார்.

# பிற மொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டும்: வெங்கைய நாயுடு

**புதுடெல்லி, பிப்.14:**

மாணவர்கள் தாய்மொழியுடன் பிற மொழிகளையும் ஆர்வத்துடன் கற்றுக்கொள்ளவேண்டும் என முன்னாள் குடியரசு துணைத் தலைவர் வெங்கைய நாயுடு வலியுறுத்தினார்.

சென்னையை அடுத்த காட்டாங்கொளத்தூர் எஸ்ஆர்எம் கலை அறிவியல் கல்லூரியின் 28-ஆவது பட்டமளிப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது. பல்கலைக்கழக வேந்தர் டி.ஆர்.பாரிவேந்தர் தலைமையில் நடைபெற்ற விழாவில் 1,070 பேருக்குப் பட்டம் வழங்கப்பட்டன.

இதில், சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற முன்னாள் குடியரசு துணைத் தலைவர் வெங்கைய நாயுடு, மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி பேசியதாவது:

ஹிந்தி திணிக்கப்படக்கூடாது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். எனினும் ஹிந்தியை முழுமையாகவும் எதிர்க்கக் கூடாது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணிபுரிய விரும்பினால் ஹிந்தி மொழி அவசியமாகும். அதேபோல், சர்வதேச இணைப்பு மொழியான ஆங்கிலத்தையும் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தாய்மொழியில் பேசுவதைப் பெருமையாகக் கருதுங்கள். வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றாலும், மீண்டும் உங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பிவந்து சேவை செய்யுங்கள். உங்களுக்கு வாழ்வு அளித்த சமூகத்துக்கு மீண்டும் எதையாவது திருப்பித் தாருங்கள்.

புதிய தொழில்நுட்பங்களைக் கற்று கொண்டு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்கள் தங்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர். இந்த நிகழ்வில் எஸ்ஆர்எம் கல்விக் குழுமத் தலைவர் ரவி பச்சமுத்து, தாளாளர் ஹரிணி ரவி முதல்வர் ஆர். வாசுதேவராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கு: புதிய ’சாம்பிள்’ திரட்டிய எஸ்ஐடி



**பத்தனம்திட்டா, பிப்.14:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் தங்கத் தகடுகளில் தங்கம் திருடுபோன வழக்கை கேரள குற்றப்பிரிவு ஏடிஜிபி தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் தொழிலதிபர் உன்னி கிருஷ்ணன் போத்தி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில், உயர் நீதிமன்றம் அளித்த உத்தரவின்படி எஸ்.பி. எஸ். சசிதரன் தலைமையிலான எஸ்ஐடி குழுவினர் நேற்று சபரிமலைக்கு சென்றனர்.

கோயில் நடை மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. பல்வேறு பூஜைகளுக்குப் பிறகு கோயில் மூடப்பட்ட பின்னர் புதிய மாதிரிகளை எஸ்ஐடி சேகரித்தது. அந்த மாதிரிகள் அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அதன் பின்னர் பிப்ரவரி 19ம் தேதி நீதிமன்றத்தில் எஸ்ஐடி அறிக்கை தாக்கல் செய்யும்.

# ஜெகன் ஆட்சியில் பல கோயில்களுக்கு கலப்பட நெய் விநியோகம்: சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை அறிக்கையில் தகவல்

**ஏலூரு, பிப்.14:**

ஆந்திராவில் கடந்த 2022-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரை ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சிக் காலத்தில் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு கலப்பட நெய் விநியோகம் செய்தது உறுதியானது.



இந்நிலையில், காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் கோயில், ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோயில், ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர் கோயில் மற்றும் ஏலூரில் உள்ள சின்ன திருப்பதி என்றழைக்கப்படும் துவாரகா திருமலை கோயிலிலும் பிரசாதங்களில் இதே கலப்பட நெய் உபயோகப்படுத்தப்பட்டதாக சிபிஐ சிறப்பு புலனாய்வுக் குழு அளித்துள்ள அறிக்கையில் வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

போலே பாபா பால் நிறுவனம் திருப்பதியில் உள்ள விநாயகா ஏஜென்சிஸ், சுமதி டிரேடர்ஸ் ஆகிய 2 நிறுவனங்களில் இருந்து ரசாயனங்கள் வாங்கி, அதனை நெய் போன்ற திரவத்தில் கலந்தது அம்பலமாகி உள்ளது. இந்த 2 ஏஜென்சிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நெய் போன்ற ரசாயனம் கலந்த திரவத்தை திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு மட்டுமல்லாது, ஆந்திராவில் உள்ள பல முக்கிய கோயில்களுக்கும் சுமதி டிரேடர்ஸ் மற்றும் விநாயகா ஏஜென்சிஸ் மூலமாக வாங்கிச் சென்று கடந்த 2022-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரை விநியோகம் செய்யப்பட்டுள்ளது என சிறப்பு புலனாய்வுக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதனால் தற்போது பக்தர்கள் தங்களின் கோபத்தை சமூக வலைதளம் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்கு காரணமாக இருந்தவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# புதுச்சேரியில் நகராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கவில்லை: இந்திய கணக்குத் தணிக்கைக் குழு அறிக்கை

**புதுச்சேரி பிப்.14:**

நகராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கும் 74-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை புதுச்சேரி அரசு முழுமையாக அமல்படுத்தவில்லை என்று இந்திய கணக்குத் தணிக்கைக் குழுத் தலைவரின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

புதுச்சேரிசட்டப்பேரவையில் இந்த அறிக்கை வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. இது தொடா்பாக தமிழ்நாடு-புதுச்சேரி முதன்மை கணக்காயத் தலைவா் ஆா். திருப்பதி வெங்கடசாமி செய்தியாளா்களிடம் கூறியது:

74-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நகராட்சி அமைப்புகளுக்கு 18 செயல்பாடுகளைப் பகிா்ந்து அளிக்க வழிவகை செய்துள்ளது.

ஆனால் புதுச்சேரியில் இச்சட்டம் 4 செயல்பாடுகளை மட்டும் பகிா்ந்து அளித்து அமல்படுத்தியுள்ளது.

அதனால் இந்தத் திருத்தச் சட்டம் முழுமையாக இங்கு அமல்படுத்தவில்லை. மேலும், புதுச்சேரியில் 2006 -ஆம் ஆண்டுதான் நகராட்சி அமைப்புகளுக்குத் தோ்தல் நடந்தது. இதில் தோ்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் 2011- ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்தனா். அதற்குப் பிறகு இந்தத் தோ்தல் நடத்தப்படவில்லை. மேலும், புதுச்சேரியில் உள்ள நகராட்சி அமைப்புகள் சொந்த வருவாயைப் பெருக்காமல் புதுச்சேரி அரசின் வருவாயைச் சாா்ந்து இயங்கி வருகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை முதியோா் ஓய்வூதியத்துக்கான விண்ணப்பங்களை மின்னணு முறையில் பெறாதது தவறு என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளோம். மேலும், புதுச்சேரி, காரைக்காலில் இறைச்சிக் கூடங்களைப் பராமரிப்பதில் பல குறைபாடுகள் இருப்பதையும் குறிப்பிட்டுள்ளோம் என்றாா் திருப்பதி வெங்கடசாமி. பேட்டியின்போது, புதுச்சேரி அலுவலகத்தின் தலைமை அதிகாரி சுகேந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனா்.

# ஃபரீதாபாத் கொலை வழக்கில் 4 பேர் கைது

**புதுடெல்லி, பிப்.14:**

ஃபரீதாபாதின் பல்லா பகுதியில் 34 வயது நபா் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடா்பாக 2 சிறுவா்கள் உள்பட 4 போ் கைதுசெய்யப்பட்டதாக காவல் துறையினா் தெரிவித்துள்ளனா்.

இது தொடா்பாக ஃபரீதாபாத் சரக உதவி காவல் ஆணையா் (குற்றம்) வருண் தஹியா செய்தியாளா்களிடம் புதன்கிழமை கூறியதாவது: கிதவாா காலனியைச் சோ்ந்தவா ஜெய் சிங் பைஸ்லா. கடந்த திங்கள்கிழமை காலை 8 மணியளவில் அவருடைய நண்பா் சௌரவ் உடன் அப்பகுதியில் உள்ள பூங்காவில் அமா்ந்து பேசிக்கொண்டிருந்தாா். அப்போது, அவா்களைச் சுற்றி வளைத்த 5 போ் அடங்கிய கும்பல் ஜெய்சிங்கை கத்தியால் 8 முறை குத்திவிட்டு சம்பவ இடத்திலிருந்து தப்பியோடியது. இதைத்தொடா்ந்து, அருகில் இருந்த மக்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனா். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவா்கள் அவா் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனா்.

இந்தச் சம்பவம் தொடா்பாக பல்லா காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஜெய் சிங் கொலையில் தொடா்புடைய இரு சிறுவா்கள் திங்கள்கிழமை மாலையில் கைதுசெய்யப்பட்டனா். ஹிமன்ஷு மற்றும் துஷாா் ஆகிய இருவா் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டனா்.

ஜெய்சிங் நண்பரின் சகோதரியை அவா்கள் நால்வரும் கேலி செய்ததாக விசாரணையின்போது தெரிவித்தனா். இதை அறிந்த ஜெய்சிங் அவா்களை மிரட்டிய நிலையில், இதற்குப் பழிவாங்கும் விதமாக இரு சிறுவா்கள் உள்பட நால்வரும் ஜெய்சிங்கை கொலை செய்தனா்.

இந்தச் சம்பவம் தொடா்பாக தொடா்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது என்றாா் உதவி காவல் ஆணையா் வருண் தஹியா.

# தேர்தல் பணிகளுக்கு உதவி: நேபாளத்துக்கு 270 வாகனங்களை பரிசளித்த இந்தியா

**புதுடெல்லி, பிப்.14:**

தேர்தல் தொடர்பான பணிகளுக்கு உதவி செய்யும் நோக்கில், நேபாளத்துக்கு 3-ஆவது கட்டமாக இந்தியா 270 வாகனங்களை பரிசாக அளித்துள்ளது.

நேபாளத் தலைநகர் காத்மாண்டில் உள்ள அந்நாட்டின் உள்துறை அமைச்சகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 50 லாரிகள் உள்ளிட்ட 270 வாகனங்களை நேபாள உள்துறை அமைச்சர் ஓம் பிரகாஷ் ஆர்யலிடம் அந்நாட்டுக்கான இந்தியத் தூதர் நவீன் ஸ்ரீவாஸ்தவா வழங்கினார்.

அடுத்த மாதம் 5-ஆம் தேதி நேபாளத்தில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் உதவி செய்யும்படி இந்தியாவிடம் நேபாளம் கோரிக்கை விடுத்திருந்தது. இதையேற்று இந்தியா உதவிகளை செய்து வருகிறது. ஏற்கெனவே 310 வாகனங்கள் மற்றும் சில சாதனங்களை 2 கட்டங்களாக நேபாளத்திடம் இந்தியா கடந்த ஜனவரி மாதம் அளித்தது. இதையடுத்து 3-ஆவது கட்ட உதவியாக தற்போது 270 வாகனங்களை இந்தியா வழங்கியுள்ளது. இந்த உதவிக்காக இந்திய அரசுக்கு நேபாள உள்துறை அமைச்சர் ஆர்யல் நன்றி தெரிவித்து கொண்டுள்ளார்.

# ராகுலின் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை: பாஜக நிராகரிப்பு

**புதுடெல்லி, பிப்.14:**

ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்று பாஜக தெரிவித்துள்ளது.

இந்தியா-அமெரிக்கா இடையேயான இடைக்கால வா்த்தக ஒப்பந்தத்தை எதிா்க்கட்சித் தலைவா் ராகுல் காந்தி கடுமையாக விமா்சித்திருந்தாா்.

இந்தியா- அமெரிக்கா இடையே இடைக்கால வா்த்தக ஒப்பந்தம் தொடா்பாக கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதை சுட்டிக்காட்டி, மக்களவையில் புதன்கிழமை பேசிய எதிா்க்கட்சித் தலைவா் ராகுல் காந்தி, இந்தியாவை அமெரிக்காவிடம் மத்திய அரசு விற்று விட்டதாகவும், இந்தியா சரணடைந்து விட்டதாகவும் சாடியிருந்தாா்.

இந்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்து, டில்லியில் செய்தியாளா்களிடம் பேசிய பாஜக தேசிய செய்தித் தொடா்பாளா் சுதான்சு திிவேதி கூறியதாவது:

ராகுல் காந்தி, மக்களவையில் தெரு பாஷையில் பேசியும், தெருவில் நடப்பது போலவும் நடந்து நாடாளுமன்ற கண்ணியத்தையும், அரசியலையும் மிகவும் தரம் தாழ்த்தி விட்டாா். மீண்டும் ஒருமுறை அவா் வழக்கமான அவதூறு பாணியில் அடிப்படை ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளையும் பொய் குற்றச்சாட்டுகளையும் தெரிவித்துள்ளாா்.

பிரதமா் மோடி மீதான வெறுப்பால், மக்களவைத் தலைவா் திரும்பத் திரும்ப வலியுறுத்தியதையும் கண்டுகொள்ளாமல், இக்குற்றச்சாட்டுகளை கூறியுள்ளாா்.

நாடு விற்கப்பட்டு விட்டதாக ராகுல் காந்தி தெரிவிக்கிறாா்.

ராஜ்ஜீய மற்றும் பொருளாதார கொள்கைகள் தொடா்பாக ராகுலுக்கு புரிதல் இருந்திருந்தால், இதுபோல அடிப்படை ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை தெரிவித்திருக்க மாட்டாா் என்றாா்.

# ஜனவரியில் சில்லறை பணவீக்கம் 2.75% : புதிய கணக்கீடு முறை அறிமுகம்

**புதுடெல்லி, பிப்.14:**

தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) வியாழக்கிழமை வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த ஜனவரிக்கான சில்லறை பணவீக்கம் 2.75 சதவீதமாகவும், உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் 2.13 சதவீதமாகவும் புதிய முறையில் கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை 2012-ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு சில்லறை பணவீக்கம் கணக்கிடப்படும். இனி 2024-ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாகக் கொள்ளப்படும். புதிய கணக்கீட்டு முறையில் பொருள்களின் எண்ணிக்கை 259-லிருந்து 308-ஆகவும், சேவைகளின் எண்ணிக்கை 40-லிருந்து 50-ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற வீட்டு வாடகை, சிஎன்ஜி, பிஎன்ஜி போன்ற எரிபொருள்கள், தொலைபேசி கட்டணங்கள், ரயில் மற்றும் விமானக் கட்டணங்கள், தபால் கட்டணங்கள், ஓடிடி சந்தாக்கள் உள்ளிட்ட தரவுகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.

தற்போதைய எண்ம பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப, பொதுமக்களின் உண்மையான அன்றாட செலவுகளைத் துல்லியமாகக் காட்டவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகப் புள்ளியியல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# பவானாவில் 17 வயது சிறுவன் கத்தியால் குத்திக் கொலை: 7 பேர் கைது

**புதுடெல்லி, பிப்.14:**

வெளிப்புற வடக்கு டில்லியின் பவானா பகுதியில் 17 வயது சிறுவன் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 4 சிறார்கள் உள்பட 7 பேர் கைது செய்யப்பட்டதாக காவல் துறையினர் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

இது தொடர்பாக காவல் துறையினர் மேலும் கூறியதாவது: இந்த சம்பவம் தொடர்பாக புதன்கிழமை இரவு 9:36 மணிக்கு தகவல் வந்தது. ஜேஜே காலனியைச் சேர்ந்த சலீம் என்பவர் கத்திக் குத்துக் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் கொண்டு வரப்பட்டதாக மருத்துவமனையில் இருந்து தகவல் தெரிவிக்கப்பட்டது.

முன் பகை காரணமாக அன்று இரவு 8:30 மணியளவில் சிலர் அவரை தாக்கியதாகக் கூறப்பட்டது. இது தொடர்பாக நரேலா தொழிற்துறை பகுதி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து, ஜேஜே காலனியைச் சேர்ந்த சலின் (21), சாஹில் (20), ஃபஹத் (18) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். மேலும் 4 சிறார்கள் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டனர். குற்றத்தில் பயன்படுத்தப்பட்ட 4 கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டது. முகமது ஃபரூக் என்பவருக்கு இந்த வழக்கில் உள்ள தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.




# தாய்லாந்தில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட பாம்பு உள்ளிட்ட 31 அரிய வகை உயிரினங்கள் பறிமுதல்

**சென்னை, பிப்.14:** தாய்லாந்தில் இருந்து சென்னைக்கு விமானம் மூலம் கடத்தி வரப்பட்ட பாம்பு உள்ளிட்ட 31 அரிய வகை உயிரினங்களை, சென்னை விமான நிலைய சுங்கத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து, நேற்று முன்தினம் நள்ளிரவு சென்னை வந்த விமானத்தில் இருந்த பயணிகளை சுங்கத் துறை அதிகாரிகள் தீவிரமாகக் கண்காணித்தனர்.

குறிப்பாக, சுற்றுலா விசாவில் சென்றுவிட்டு உடனடியாகத் திரும்பும் பயணிகளை தீவிரமாக கண்காணித்தனர். அந்த வகையில், சென்னையைச் சேர்ந்த 30 வயது இளைஞர் ஒருவரின் நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த அதிகாரிகள், அவரை மடக்கி விசாரித்தனர். அவர் முன்னுக்குப்பின் முரணாகப் பேசியதால், அவரது பெரிய சூட்கேஸைத் திறந்து சோதனையிட்டனர்.

அப்போது, சூட்கேஸுக்குள் உயிரினங்கள் சுவாசிப்பதற்காகச் சிறிய துளைகள் இடப்பட்டிருப்பதைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். உள்ளே பார்த்தபோது, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரிய வகை பாம்புகள், ஆமைகள் மற்றும் பல்லிகள் உயிருடன் ஊர்ந்து கொண்டிருந்தது தெரிந்தது.

குறிப்பாக, ஆப்பிரிக்கா மற்றும் சகாரா பகுதிகளில் வசிக்கும் அபூர்வ வகை சல்கட்டா ஆமைகள் 9, தென் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளை சேர்ந்த அரிய வகை பல்லிகள் 4, கிழக்கு ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஈஸ்டர்ன் வாட்டர் டிராகன் ஒன்று, ஆப்பிரிக்காவை தாயகமாகக் கொண்ட விஷமற்ற ராயல் பைத்தான் மலைப் பாம்புகள் 12, கருப்பு நிறமும் சிவப்பு கண்களும் கொண்ட ஆப்பிரிக்க இன அல்பைனோ கார்ன் பாம்பு ஒன்று, ஆஸ்திரேலிய இனத்தை சேர்ந்த நீல நாக்கு உடும்புகள் 3, வெள்ளை நிற அரச நாகம் என்று அழைக்கப்படும் கொடிய விஷம் வாய்ந்த ஒயிட்சைட் கிங் பாம்பு ஒன்று என உலக அளவில் அழிந்து வரும் நிலையில் உள்ள 31 அரிய வகை உயிரினங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, அந்த இளைஞரை கைது செய்து அதிகாரிகள் நடத்திய விசாரணையில், 'ஆடம்பர பங்களாக்களில் வசிப்பவர்கள் இவற்றைச் செல்லப் பிராணிகளாக வளர்ப்பதற்கும், வாஸ்து சாஸ்திரத்தின்படி வீட்டில் வைத்தால் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கையிலும் பல லட்சங்கள் கொடுத்து வாங்குகின்றனர். இதற்காகவே இந்த உயிரினங்கள் கடத்தி வரப்பட்டுள்ளன' என்பது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து, வெளிநாட்டு உயிரினங்கள் மூலம் புதிய வகை வைரஸ்கள் அல்லது நோய்க்கிருமிகள் பரவும் அபாயம் இருப்பதால், மத்திய சுகாதாரத் துறையின் ஆலோசனையின்படி, இவை அனைத்தும் வந்த விமானத்திலேயே மீண்டும் தாய்லாந்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட இளைஞர் மீது சுங்கச் சட்டம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவரை 'கடத்தல் குருவி'யாகப் பயன்படுத்தி, பின்னணியில் இருந்து இயக்கிய முக்கிய குற்றவாளியைத் தேடும் பணியில் சுங்கத்துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

# எழும்பூர் காவலர் குடியிருப்பில் பெண் காவலர் தற்கொலை



**சென்னை, பிப்.14:** எழும்பூர் காவலர் குடியிருப்பில் பெண் காவலர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். பெற்றோர் அளித்த புகாரின் பேரில் கணவர் கைது செய்யப்பட்டார்.

சென்னை எழும்பூர் காவல் நிலையம் அருகே உள்ள காவலர் குடியிருப்பில் வசித்து வந்தவர் பெண் காவலர் புவனேஸ்வரி (29).

விழுப்புரம் மாவட்டம், வானூர் அருகே உள்ள புள்ளிசைபள்ளம் பகுதியைச் சேர்ந்த இவர், 2016-ல் காவல் துறையில் பணிக்கு சேர்ந்து, தற்போது எழும்பூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் பணியாற்றி வந்தார்.

2024-ல் காவலர் சிலம்பரசன் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். திருமணம் ஆனதிலிருந்தே சிலம்பரசன் தினமும் மது அருந்திவிட்டு வந்து மனைவியை அடித்து சித்திரவதை செய்ததாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் மது அருந்திவிட்டு வந்த சிலம்பரசன், புவனேஸ்வரியிடம் தகராறில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. பின்னர் இருவரும் தூங்கச் சென்ற நிலையில், புவனேஸ்வரி மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இரவில் கண்விழித்துப் பார்த்த சிலம்பரசன், உடனடியாக காவல் துறைக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

எழும்பூர் போலீஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், புவனேஸ்வரி திருவண்ணாமலையை சேர்ந்த வழக்கறிஞரான ஆண் நண்பர் ஒருவருக்கு ரூ.60 ஆயிரம் கடன் கொடுத்துள்ளார். கணவர் சிலம்பரசன் அந்த பணத்தை திரும்ப வாங்குமாறு மனைவியை கட்டாயப்படுத்தியுள்ளார்.

அதன்படி, புவனேஸ்வரி கொடுத்த பணத்தை கேட்டபோது, சம்பந்தப்பட்ட வழக்கறிஞர் பணத்தை கொடுக்கவில்லையாம். இதைத் தொடர்ந்து புவனேஸ்வரி, வழக்கறிஞர் மீது திருவண்ணாமலை மாவட்ட எஸ்பியிடம் புகார் அளித்துள்ளார். சம்பவத்தன்று இந்த விவகாரம் தொடர்பாக கணவன், மனைவியிடையே மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாகவே புவனேஸ்வரி தற்கொலை செய்து கொண்டிருக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. இருப்பினும் இறப்புக்கான காரணம் குறித்து தொடர்ந்து விசாரித்து வருகிறோம் என போலீஸார் தெரிவித்தனர். இந்நிலையில், புவனேஸ்வரியின் பெற்றோர் எழும்பூர் காவல் நிலையத்தில் சிலம்பரசன் மீது புகார் தெரிவித்தனர்.

புவனேஸ்வரியின் தாய் அன்புக்கரசி கூறும்போது, "திருமணமான நாளிலிருந்து வரதட்சணை கேட்டு மகளை, சிலம்பரசன் கொடுமைப்படுத்த ஆரம்பித்தார். நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் மகள் போன் செய்து, நிலம் வாங்க கணவர் ரூ.2 லட்சம் கேட்பதாகக் கூறினார்.

நாங்கள் மகளிடம் சண்டையிடாதீர்கள், பணம் தருகிறோம் என்று கூறினோம். இரவு 10 மணிக்கு எழும்பூர் போலீஸார் எங்களை அழைத்து புவனேஸ்வரி தற்கொலை செய்துகொண்டதாக தெரிவித்தனர். சிலம்பரசன்தான், எங்கள் மகளை கொலை செய்திருக்க வேண்டும். அவர் மீது நட வடிக்கை எடுக்க வேண்டும்" என்றார். இதனிடையே, தற்கொலைக்கு காரணமாக இருந்த சிலம்பரசனை போலீஸார் கைது செய்தனர்.

# சுகாதார ஆய்வாளர் பணித் தேர்வு: ஒரு மையத்தில் மட்டுமே முறைகேடு - உயர்நீதிமன்றத்தில் தகவல்



**சென்னை, பிப்.14:** சுகாதார ஆய்வாளர்கள் பணிக்காக நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வில் ஒரு மையத்தைத் தவிர வேறு எங்கும் முறைகேடுகள் கண்டறியப்படவில்லை என, தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வியாழக்கிழமை தெரிவித்தது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு பகுதியைச் சேர்ந்த கதிர் ஜாய்சன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

தமிழக சுகாதாரம், குடும்ப நலத் துறையில் காலியாக உள்ள 1,429 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு கடந்த டிசம்பர் 7-ஆம் தேதி நடைபெற்றது. இந்தத் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் நிகழ்ந்தன. தேர்வு மையங்களில் வெளிப்படையாகவே தேர்வர்கள் கைப்பேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர். இது தேர்வு மையக் கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியுள்ளது. எனவே, நேர்மையற்ற முறையில் நடைபெற்ற இந்தத் தேர்வை ரத்து செய்து, மறு தேர்வு நடத்த உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனுவை ஏற்கெனவே விசாரித்த உயர்நீதிமன்றம், சுகாதார ஆய்வாளர் பணி நியமனத்துக்கு இடைக்காலத் தடை விதித்தது. இந்த நிலையில், இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதிபதி பி. புகழேந்தி முன் வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய நிர்வாக அலுவலர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனு:

தேர்வு வாரிய விதிமுறைகளின்படியே சுமுகமாக தேர்வு நடைபெற்றது. அனைத்துத் தேர்வு மையக் கண்காணிப்பு கேமராக்களும் ஆய்வுக்கு உள்படுத்தப்பட்டன. இவற்றில் புதுக்கோட்டையில் உள்ள ஒரு கல்லூரி தேர்வு மையத்தில் மட்டும் 4 தேர்வர்கள் கைப்பேசிகளைப் பயன்படுத்தி முறைகேட்டில் ஈடுபட்டது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, இந்தத் தேர்வர்கள் மீதும், இரு கண்காணிப்பாளர்கள் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கக் கோரி, புதுக்கோட்டை மாவட்டம், வல்லாதிரக்கோட்டை காவல் நிலையத்தில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் சார்பில் புகார் அளிக்கப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மேலும், நான்கு தேர்வர்களுக்கும் அரசுப் பணிகளுக்கான தேர்வுகளில் பங்கேற்கத் தடை விதிப்பது குறித்தும் விளக்கம் கோரப்பட்டுள்ளது. இந்தத் தேர்வு மையத்தைத் தவிர, மாநிலத்தில் வேறு எந்த மையங்களிலும் முறைகேடுகள் நிகழ்ந்ததாகக் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.


இதையடுத்து, நீதிபதி பிறப்பித்த உத்தரவு: இந்த வழக்கின் விசாரணை வருகிற 24-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. அதுவரை சுகாதார ஆய்வாளர் பணி நியமன ஆணைகளை வழங்கக் கூடாது என்றார் நீதிபதி.

# பழனி மலைக்கோவிலில் விஜய் பிரசார பாடலை ஒலிபரப்பிய நபர் மீது போலீசில் புகார்

**பழனி, பிப்.14:** பழனி முருகன் கோவிலில் தரிசனம் செய்ய தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் அதிக அளவில் வருகின்றனர். இதில் கூட்ட நேரங்களில் திருட்டு போன்ற குற்ற சம்பவங்களை தடுக்கவும், உடன் வந்தவர்களை பத்திரமாக அழைத்து செல்வது மற்றும் பக்தர்களுக்கான சேவைகள் மற்றும் முருகன் பக்தி பாடல்கள் ஒலிபெருக்கியில் அறிவிப்பு செய்யப்படும். இதற்காக அடிவாரம், கோவில் படிப்பாதை, யானைப்பாதையில் ஒலிபெருக்கி கட்டப்பட்டுள்ளது.

கடந்த 1-ந்தேதி தைப்பூச திருவிழா நடந்ததையொட்டி கோவிலில் கூட்டம் அலைமோதியது. இதனால் படிப்பாதை, யானைப்பாதையில் ஒலிப்பெருக்கி கட்டி மைக் மூலம் ஒலிபரப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில் பழனி முருகன் கோவில் யானைப்பாதையில் அமைக்கப்பட்டிருந்த



ஒலிபெருக்கியில் தரிசனம் செய்ய வந்த வாலிபர், மைக்செட்டில் த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரசார பாடலை ஒலிக்க செய்தார். இந்த சம்பவம் இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப்பில் வைரலாகி பரவியது. இது பக்தர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இன்ஸ்டாகிராமில் ஒளிபரப்பான அந்த வீடியோவில், யானைப்பாதையில் நிற்கும் வாலிபர், மைக்செட் அமைத்த இடத்தில் ஆள் இல்லாத நேரத்தில் தனது செல்போனில் இருந்த விஜய் பிரசார பாடலை மைக் மூலம் ஒலிபரப்பு செய்தார். அதை மற்றொரு நபர் வீடியோ எடுத்து இன்ஸ்டாகிராமில் பரப்பி உள்ளார். இந்த வீடியோ வைரல் ஆனதால் பக்தர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதுபற்றி கோவில் நிர்வாகத்தினர் கூறுகையில்,"யானைப் பாதையில் போலீசார் சார்பில் அறிவிப்பு செய்ய மைக்செட் அமைக்கப்பட்டுள்ளது. அதில் தான் விஜய் கட்சியின் பிரசார பாடலை ஒலிக்க செய்துள்ளார்.

முக்கிய அறிவிப்பு செய்வதற்கான மைக்செட் அறை மலைக்கோவிலில் மட்டுமே உள்ளது. இந்த சம்பவம் குறித்து அடிவாரம் போலீசில் புகார் செய்யப்பட்டுள்ளது. அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர்.

# ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி முன்னாள் மாணவிகளின் அழகோவியங்கள்! - லலித் கலா அகாடமியில் கண்காட்சி

**சென்னை, பிப்.14:** சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் நுண்கலைத் துறை சார்பில், அதன் முன்னாள் மாணவிகளின் கலைத் திறமையைக் கொண்டாடும் விதமாக 'தி ஆர்ட் ஆஃப் பிகமிங்: ஸ்டெல்லா(ர்) அலுமினி கேன்வாஸ்' என்ற பிரம்மாண்ட ஓவியக் கண்காட்சி லலித் கலா அகாடமியில் கடந்த 10-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. நுண்கலைத் துறையின் முன்னாள் தலைவரும், கலை விமர்சகருமான அஷ்ரபி எஸ்.பகத் தொகுத்து வழங்கி வருகிறார்.

கலைஞர்களின் தனித்துவமான பாணி:

பட்டுத் துணியில் சாயங்களைப் பயன்படுத்தும் பீனு கோவிந்த் ராவ், 'கியூபிஸ்ட் எக்ஸ்பிரஷனிசம்' பாணியை வெளிப்படுத்தும் ஹரிணி குமார், மாறிவரும் பருவகாலங்களின் நிறங்களை வித்தியாசப்படுத்திக் காட்டும் ஹினா பட், உணர்ச்சிகள், உள்ளுணர்வுக்கு முக்கியத்துவம் தரும் கனவுலகக் காட்சியை படைக்கும் இசையரசி அண்ணாமலை, பழைய வீடுகள், சிதிலமடைந்த சுவர்களின் வழியே காலத்தின் மாற்றத்தை பதிவு செய்யும் லட்சுமி ஸ்ரீநாத், பார்வையாளரே சிற்பத்தின் ஓர் அங்கமாக மாறி, அதை ஆழமாக உணர்ந்து அனுபவிக்கும் படைப்பை உருவாக்கிய லலிதா சங்கர், 'வார்ப்டு ஃபேன்டஸி' ஓவியம்படைத்த மல்லிகா மாதவன், அலைகள், நீரோட்டங்களை காலத்தின் வெளிப்பாடாக சித்தரித்த பார்வதி நாயர், பார்வையாளர்களை ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் அடுக்குகளாக ஓவியத்தைப் படைத்த பூஜா எஸ்.ஐ., சுற்றுச்சூழல் பாதுகாப்பை உணர்த்தும் ப்ரீத்தா கண்ணன், அன்றாட வாழ்க்கை அனுபவங்களை எக்ஸ்பிரஷனிச நிறங்கள் மூலம் வெளிப்படுத்தும் பிரியா சுனீல், கனவுக்கும், எதார்த்தத்துக்கும் இடையிலான கற்பனை வெளிகளை ஆராயும் ரஜினி கிருஷ்ணன், மனித மனதின் நுணுக்கங்களை விளக்கும் ரீனா டி கோச்சார், காலத்தின் நிலையற்ற தன்மையை தியானம்போலகாட்சிப்படுத்தும் சந்தியா கோபிநாத், மன அமைதி, உள்நிலை விழிப்புணர்வைத் தேடும் பயணத்தைக் காட்டும் ஷாலினி பிஸ்வஜித், இயற்கைக்கும், பாரம்பரியத்துக்குமான உரையாடல் போன்ற ஓவியத்தைப் படைத்த சுசேதா மிஸ்ரா ஓங்கார், கடலில் நிலம் கரைவது போன்ற தொடர் ஓட்டத்தை காட்சிப்படுத்தும் சுனிதா சவுத்ரி, இந்திய மினியேச்சர் ஓவிய மரபின் செழுமை, அமைதியை பிரதிபலிக்கும் படைப்பைத் தந்துள்ள பி.ஸ்வப்னா ரெட்டி, அண்டவெளியின் மர்மங்களை மனித அனுபவத்தோடு பிணைத்துக் காட்டும் தேஜோமயி மேனன், வாழ்வின் மூலத்தை நோக்கிய உள்முகப் பயணத்தை சித்தரிக்கும் உண்ணாமலை அண்ணாமலை.

இந்த 20 கலைஞர்களும்தான் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் முன்னாள் மாணவிகள். தற்போது பல்வேறு தளங்களில் தடம்பதித்துள்ள இவர்கள் 20 பேரையும் ஒன்றிணைக்கும் பாலமாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

கண்காட்சியில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு ஓவியமும் அவர்களது தனித்துவமான பாணியையும், அவர்கள் கடந்து வந்த நீண்ட கலைப் பயணத்தையும் பிரதிபலிப்பதாக உள்ளன. கலை ஆர்வலர்கள், ஓவியர்கள், மாணவ, மாணவிகளிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ள இந்த ஓவியக் கண்காட்சி பிப்.16-ம் தேதி வரை நடைபெறுகிறது.

# மார்ச் முதல் ஊதிய உயர்வு வழங்க அரசு உறுதி: 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் போராட்டம் வாபஸ்




**சென்னை, பிப்.14:** மார்ச் மாதம் முதல் ஊதிய உயர்வு வழங்க அரசு உறுதியளித்ததை தொடர்ந்து, 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் அறிவித்த போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

தமிழகத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவையை நிர்வகித்து வரும் இஎம்ஆர்ஐ கிரீன் ஹெல்த் சர்வீஸ் நிறுவனத்தில் பணியாற்றும் ஓட்டுநர்கள், மருத்துவ உதவியாளர் களுக்கு முறையான ஊதியம் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இதையடுத்து, திமுகவின் தொழிற்சங்கமான தமிழ்நாடு 108 அவசர ஊர்தி தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தினர், பல்வேறு கட்டப் போராட்டங்களை முன்னெடுத்தனர். சென்னையில் டி.எம்.எஸ். வளாகத்திலிருந்து, முதல்வர் இல்லம் நோக்கி மாபெரும் பேரணி நடத்தப்போவதாக அறிவித்திருந்தனர்.

இதையடுத்து, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மூன்று நாட்களாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தையில் சுமூகத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து போராட்டம் வாபஸ் பெற்றதாக சங்கச் செயலாளர் இருளாண்டி தெரி வித்தார்.

# மடப்புரம் கோயில் காவலாளி கொலை வழக்கு: நீதிமன்றத்தில் போலீஸர் முன்னிலையாக உத்தரவு



**சென்னை, பிப்.14:** மடப்புரம் கோயில் காவலாளி கொலை வழக்கில், பணியிடை நீக்கம் செய்யப்பட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் சண்முகசுந்தரம், அப்போது பணியிலிருந்த திருப்புவனம் காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர் ஆகிய 4 பேரும் வருகிற பிப்ரவரி 25 -ஆம் தேதி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என மதுரை மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

சிவகங்கை மாவட்டம், மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயிலில் அதே பகுதியைச் சேர்ந்த அஜித்குமார் காவலாளியாகப் பணியாற்றினார். இந்த நிலையில், கோயிலில் வழிபாடு செய்வதற்காக வந்த பேராசிரியை நிகிதா, நகைகள் காணாமல்போனதாக திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதுதொடர்பாக அஜித்குமாரிடம் தனிப்படைக் காவலர்கள் விசாரணை நடத்தினர். தனிப்படை போலீஸார் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார். இதையடுத்து, தனிப் படைக் காவலர்களான கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன் ஆகிய 5 பேரும் கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலும், சிபிஐ குற்றப் பத்திரிக்கையில் காவல் வாகன ஓட்டுநரான தனிப்படைக் காவலர் ராமச்சந்திரன், மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் சண்முகசுந்தரம், திருப்புவனம் காவல் ஆய்வாளர் ரமேஷ்குமார், உதவி ஆய்வாளர் சிவக்குமார், தலைமைக் காவலர் இளையராஜா ஆகியோர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை மதுரை மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள 5 தனிப்படைக் காவலர்கள் பிணை கோரி, உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீமதி, செய்யாத குற்றத்துக்காக ஒருவரை அடித்தே கொலை செய்தனர். இவர்களுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும். பேராசிரியை நிகிதாவின் புகார் உண்மையில்லையெனில், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என வழக்கு விசாரணையின் போது நீதிபதி கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில், பேராசிரியை நிகிதாவை காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி, மதுரை மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் சிபிஐ தரப்பில் அண்மையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த மதுரை மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றம், கோயில் காவலாளி கொலை வழக்கில் தொடர்புடைய பேராசிரியை நிகிதா வருகிற மார்ச் 4 -ஆம் தேதி இந்த நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாக வேண்டும் என ஏற்கெனவே உத்தரவிட்டது.

இதனிடையே, இந்த மனு மதுரை மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி செல்வபாண்டி முன் வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, சிபிஐ அதிகாரிகள் முன்னிலையாகி கூறியதாவது:

இந்த வழக்கு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் குற்றப் பத்திரிகையில் இடம் பெற்ற மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் சண்முகசுந்தரம், திருப்புவனம் காவல் ஆய்வாளர் ரமேஷ்குமார், உதவி ஆய்வாளர் சிவக்குமார், தலைமைக் காவலர் இளையராஜா ஆகிய 4 பேரையும் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என்றனர்.

இதையடுத்து, நீதிபதி செல்வபாண்டி பிறப்பித்த உத்தரவு: கூடுதல் குற்றப் பத்திரிகையில் சேர்க்கப்பட்ட மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் சண்முகசுந்தரம், திருப்புவனம் காவல் ஆய்வாளர் ரமேஷ்குமார், உதவி ஆய்வாளர் சிவக்குமார், தலைமைக் காவலர் இளையராஜா ஆகிய 4 பேரும் வருகிற பிப்ரரி 25 -ஆம் தேதி இந்த நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும். இதுகுறித்த அறிவிப்பாணையை நீதிமன்றப் பதிவாளர் அனுப்ப வேண்டும் என்றார் நீதிபதி.

# இன்று காதலர் தினம்: ரோஜா பூங்கொத்துக்கள் ரூ.600 வரை விலை உயர்வு



**போரூர், பிப்.14:** காதலர் தினம் நாளை 14-ந் தேதி (சனிக்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி காதலர்கள் பூங்கொத்து, ரோஜாப்பூ, வாழ்த்து அட்டைகள், சாக்லேட் உள்ளிட்ட வித விதமான பரிசு பொருட்களை கொடுத்து ஒருவருக்கொருவர் அன்பை பரிமாறிக் கொள்வது வழக்கம்.

காதலுக்கும் ரோஜாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மேலும் காதலின் அடையாளமாகவே ரோஜாப்பூ மாறிவிட்டதால் காதலர் தினத்தை முன்னிட்டு பூக்கடைகளில் வழக்கத்தை விட விற்பனை அதிகமாக இருக்கும்.

இந்த நிலையில் கோயம்பேடு பூ மார்க்கெட்டுக்கு கர்நாடக மாநிலம் பெங்களூரு மற்றும் ஓசூர் பகுதிகளில் இருந்து சிகப்பு, இளம் சிகப்பு, மஞ்சள், வெள்ளை உள்ளிட்ட பல்வேறு வண்ணங்களில் விதவிதமாக ரோஜா பூங்கொத்துகள் விற்பனைக்கு குவிந்துள்ளது.

இதேபோல் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள வணிக வளாகங்களில் செயல்பட்டு வரும் பூக்கடைகளில் பூங்கொத்து விற்பனை களை கட்டியுள்ளதோடு கோயம்பேடு மார்க்கெட்டை காட்டிலும் விலையும் 2 முதல் 3 மடங்கு வரை அதிகரித்து விற்பனை ஆகி வருகிறது.

கோயம்பேடுமார்க்கெட்டில் பூங்கொத்து ஒரு பஞ்ச் (20 எண்ணிக்கை) விலை விபரம் வருமாறு:-

சிகப்பு ரோஜா-ரூ.600, மஞ்சள் ரோஜா-ரூ.600, வெள்ளை ரோஜா-ரூ.400, ஆரஞ்சு ரோஜா-ரூ.500, பேபி பிங்க்-ரூ.400, ஜுமா லியா-ரூ.350.

இதுகுறித்து பூங்கொத்து வியாபாரி தேவராஜ் கூறும்போது, வரத்து குறைவால் கடந்த ஆண்டை காட்டிலும் பூங்கொத்து விலை அதிகரித்து உள்ளது. இதனால் விற்பனை சற்று மந்தமாகவே உள்ளது.

மேலும் பஸ் நிலையம் இடமாற்றம் காரணமாக புறநகர் பகுதிகளில் இருந்து கோயம்பேடு வரும் சில்லரை வியாபாரிகளின் வரத்து வெகுவாக குறைந்துவிட்டது என்றார்.

# திடீர் ரூ. 2000 அறிவிப்பு ஏன்? இந்த ஆண்டுதான் கோடைக் காலம் வருகிறதா? விஜய் சரமாரி கேள்வி!



**சென்னை, பிப்.14:** மகளிர் உரிமைத் தொகையைத் திடீரென ரூ. 2000 அறிவித்தது ஏன்? என தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் கேள்வி எழுப்பியுள்ளார்.

மகளிர் உரிமைத் தொகையாக ரூ. 5,000 இன்று (பிப். 13) காலை வரவு வைக்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மேலும், பிப்ரவரி மாதத்துக்கான ரூ. 1,000 பணத்துடன், மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கு முன்பணமாக ரூ. 2,000 மற்றும் கோடைக்கால சிறப்பு தொகுப்பாக ரூ. 2,000 என 1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 5,000 வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புக்கு திமுக கூட்டணி சார்பில் பாராட்டுகளும், எதிர்க்கட்சித் தரப்பில் கடும் விமர்சனங்களும் எழுந்துள்ளன.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தனது எக்ஸ் பக்கத்தில் முதல்வரின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "புதிதாகக் கோடைக் காலச் சிறப்புத் தொகை ரூ.2000 எனத் திடீரென அறிவித்தது எப்படி? இந்த ஆண்டு மட்டும்தான் கோடைக் காலம் வருகிறதா என்ன?

வழக்கமாக மாதந்தோறும் 15 ஆம் தேதி வரவு வைக்கப்படும் மகளிர் உரிமைத் தொகை, குறிப்பாக இன்று 13ஆம் தேதி வரவு வைக்கப்பட்டு அறிவிக்கப்படுவது ஏன்? இத்தனைக்கும் காரணம் வீதிக்கு வீதி மட்டுமில்லாமல், வீட்டுக்கு வீடு ஒலிக்கும் விசில் சத்தம்தான்.

குறிப்பாக, ஒட்டுமொத்த மகளிரின் விசில் சின்னத்திற்கான பேராதரவு அலையைக் கண்டு உண்டான அச்சம் மட்டுமே இதற்குக் காரணம். இப்போதுகூடப் பாருங்கள். ஒன்று மட்டும் உறுதியாகத் தெளிவாகிறது.

நாம் மட்டுமே இவர்களுக்கு அச்சமூட்டச் செய்யும் ஆகப்பெரும் வெற்றிக்கான மக்கள் சக்தி.

அது மட்டுமா? இவர்களை வலிய நல்லது செய்ய வைக்கும் வலிமையான அரசியல் பெருவிசையும் நாம்தான். அதுமட்டுமா? திமுக தனக்குப் போட்டியாகக் கருதுவதும் தன்னை வெல்லப் போகும் ஒரே மக்கள் சக்தி எனக் கருதுவதும் தவெக-வைத் தான் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தமிழகத்தின் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதி செய்துள்ளார்.

எனவே, என்னருமைத் தாய்மார்களே, அக்கா, தங்கைகளே, உங்கள் மகன், உங்கள் அண்ணன், உங்கள் தம்பி விஜயின் அரசியல் வருகையின் தாக்கத்தால் கிடைத்த இந்தத் உரிமைத் தொகையைச் சந்தோசமாக வாங்கிக்கொள்ளுங்கள்.

நம் ஆட்சி மலர்ந்ததும், அரசியல் ஆதாயத்திற்காகச் சுயநலமாகச் செயல்படும் இவர்களைப் போலன்றி, உண்மையான அக்கறையுடன் நம் மக்களுக்கு அனைத்து வகைகளிலும் அனைத்து வழிகளிலும் நல்லது மட்டுமே செய்வோம். அது உறுதி.

திமுக அரசுக்குத் தேர்தல் தோல்விக்கான திகில் ஊட்டும் அளவிற்கு விசில் ஊதும் தமிழ்நாட்டு மகளிருக்கு என் மனமார்ந்த நன்றி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஈஷாவில் பிப்ரவரி 15ஆம் தேதி மகா சிவராத்திரி விழா - பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்



**கோவை, பிப்.14:** கோவை தொண்டாமுத்தூர் பகுதியில் உள்ள ஈஷா யோகா மையத்தில் மகா சிவராத்திரி விழா பிப்ரவரி 15ஆம் தேதி மாலை கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இவ்விழாவில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜநாத் சிங் சிறப்பு விருந்தினராக பங்கெடுக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு கோவை பிரஸ் கிளப் அரங்கில் இன்று நடைபெற்றது. இதில் தென் கைலாய பக்தி பேரவையின் தன்னார்வலர் ரவீந்திரன் மற்றும் தன்னார்வலர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் பேசியதாவது, "ஈஷாவில் 32வது மகா சிவராத்திரி விழா 15ஆம் தேதி பிரமாண்டமாக கொண்டாடப்பட உள்ளது. இதில் சிறப்பு விருந்தினராக பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் லட்சக்கணக்கான மக்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.

15ஆம் தேதி மாலை 6 மணிக்கு தொடங்கி மறுநாள் காலை 6 மணி வரை மகா சிவராத்திரி விழா நடைபெற உள்ளது. இதில் சக்தி வாய்ந்த தியானங்கள், மந்திர உச்சாடனைகள், யோகேஸ்வரலிங்க மகா அபிஷேகம் மற்றும் சிறந்த கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

மேலும் இந்தாண்டு முதன் முறையாக சத்குரு ஆதியோகி முன்பு பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் யோகேஸ்வர லிங்கத்திற்கு மகா அபிஷேகம் எனும் ஆன்மிக செயல்களை அர்ப்பணிக்க உள்ளார்" என தெரிவித்தனர்.

மேலும், மக்களின் வசதிக்காக தேவையான பார்க்கிங் வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கழிவறைகள், மருத்துவ வசதி உள்ளிட்டவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த விழாவிற்கு பல்வேறு நாடுகளில் இருந்து மக்கள் வருகை தர உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

ஈஷாவில் நடைபெறும் மகா சிவராத்திரி விழாவை இந்தியா முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட உள்ளதாகவும், தமிழ்நாட்டில் 60 இடங்களிலும், கேரளாவில் 29 கோவில்களிலும் நேரலை செய்யப்பட உள்ளதாக தெரிவித்தனர்.

# வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் பெற்று விட்டீர்களா? - வீடு வீடாக ஆய்வு நடத்த வரும் மாநகராட்சி ஊழியர்கள்



**சென்னை, பிப்.14:** சென்னை மாநகராட்சி கால்நடை பிரிவு அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

சென்னை மாநகராட்சியில் மொத்தம் 1 லட்சத்து 80 ஆயிரம் தெரு நாய்கள் இருப்பதாக கடந்த 2024-ம் ஆண்டில் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 1 லட்சத்து 47 ஆயிரம் தெரு நாய்களுக்கு ரேபீஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. அவற்றில் 16 ஆயிரத்து 611 தெரு நாய்களுக்கு தடுப்பூசியுடன், கருத்தடை சிகிச்சையும் அளிக்கப்பட்டு, கண்காணிக்க மைக்ரோ சிப்பும் பொருத்தப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் சுமார் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்கள் உள்ளதாக தெரியவந்துள்ளது. ஆனால், தற்போது வரையில் 74 ஆயிரம் வளர்ப்பு நாய்களுக்கு மட்டுமே அவற்றின் உரிமையாளர்கள் உரிமம் பெற்றும், ரேபீஸ் தடுப்பூசியும், மைக்ரோ சிப்பும் பொருத்தி உள்ளனர்.

அடுத்த வாரத்தில் வளர்ப்பு நாய்கள் உள்ள வீடுகள் தோறும் சென்று அவற்றுக்கு உரிமம் பெறாதவர்களுக்கு தலா ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட உள்ளது. எனவே, அதற்குள் சம்பந்தப்பட்டோர் உரிமம் பெறவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மெரினாவில் கடை அமைக்க நீதிபதி மேற்பார்வையில் 300 பயனாளிகள் குலுக்கல் முறையில் தேர்வு



**சென்னை, பிப்.14:** மெரினா கடற்கரையில் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, அமைக்கப்பட உள்ள 300 கடைகளுக்கான வியாபாரிகளை குலுக்கல் முறையில் தேர்வு செய்யும் நிகழ்வு, சென்னை மாநகராட்சியின் ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இது தொடர்பான அறிவிப்பு, சென்னை உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள 1,417 வியாபாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்புகளை 21 வியாபாரிகள் பெற மறுத்தனர்.

உயர் நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டுள்ளவாறு மெரினா கடற்கரையின் 4 நீலக்கொடிதிட்டப் பகுதிகளில் மொத்தம் 300 கடைகள் அமைக்கப்பட உள்ளன உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் தலைமையிலான அலுவலர்கள் அடங்கிய இடைக்கால குழுவின் ஒத்துழைப்புடன் ஜம்மு-காஷ்மீர் உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி என்.பால் வசந்தகுமார், முன்னாள் மாவட்ட முதன்மை நீதிபதி பி.மோகன் ராஜ், சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் துணை பதிவாளர் ஆர்.ரங்கநாதன் ஆகியோர் மேற்பார்வையில் குலுக்கல் நடைபெற்றது.

ஏற்கெனவே மெரினா கடற்கரையில் உணவு வகைப்பாட்டில் 848 கடைகள், அலங்கார வகைப்பாட்டில் 261, பொம்மைகள் வகைப்பாட்டில் 308 என மொத்தம் 1,417 கடைகளை நீதிமன்றம் அடையாளம் கண்டுள்ளது. இதில், ஒவ்வொரு வகையிலும் தலா 100 வியாபாரிகள் என 300 பேர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டனர்.

அதில் தலா 5 கடைகள் என 15 கடைகள் மாற்றுத் திறனாளிகளுக்கு தேர்வு செய்யப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட வியாபாரிகள் பட்டியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

இந்த குலுக்கல் நிகழ்வு, 4 எல்இடி திரைகளில் காட்சிப் படுத்தப்பட்டது. இதற்கிடையே, இந்த குலுக்கல் நிகழ்வை மெரினா கடற்கரை வியாபாரிகள் புறக்கணித்தனர். மேலும் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில், கடற்கரையில் நேற்று கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக விவேகானந்தர் கடற்கரை மணற்பரப்பு வியாபாரிகள் சங்கத் தலைவர் சசிகுமார் கூறும்போது, "மெரினா கடற்கரையில் 1996 கடைகள் உள்ளன. இந்த கடைகளை நம்பி 5 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்கள் அனைவரும் மீனவர்கள்.

எங்கள் கருத்தை கேட்காமல், இங்கு 300 பேருக்கு மட்டுமே கடைகள் ஒதுக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, குலுக்கல் முறையில் பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் நிகழ்வை புறக் கணித்துள்ளோம். நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்தும், கடைகளை முறைப்படுத்தி, அனைத்து கடைகளுக்கும் ஒதுக்கீடு வழங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறோம்" என்றார்.




# தோல்வி பயத்தில் ஸ்டாலின் என்னவெல்லாம் செய்கிறார் பார்த்தீர்களா? இபிஎஸ் விமர்சனம்



**சென்னை, பிப்.14:** மகளிரின் உரிமைத் தொகை கணக்கில் ரூ. 5,000 வரவு வைக்கப்பட்டிருப்பதை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

பிப்ரவரி மாதத்துக்கான மகளிர் உரிமைத் தொகை ரூ. 1,000, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்துக்கான தொகை ரூ. 2,000 மற்றும் கோடைக்கால சிறப்பு தொகுப்பாக ரூ. 2,000 என மொத்தம் ரூ. 5,000 இன்று காலை மகளிர் உரிமைத் தொகை கணக்குகளில் வரவு வைக்கப்பட்டதாக முதல்வர் அறிவித்தார்.

மேலும், திமுக ஆட்சி அமைத்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ. 1000-ல் இருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தப்படும் என்றும் வாக்குறுதி அளித்துள்ளார்.

இதனை விமர்சித்து எதிர்க்கட்சித் தலைவர் இபிஎஸ் வெளியிட்டிருக்கும் எக்ஸ் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"தேர்தல் தோல்வி பயம், பொம்மை முதல்வரை என்னவெல்லாம் செய்ய வைக்கிறது என்று பார்த்தீர்களா? 28 மாதங்களாக "1000 ரூபாய்" கொடுக்காமல் இழுத்து அடித்த ஸ்டாலின் அரசு, தற்போது மூன்று மாதத் தொகையோடு சேர்த்து "கோடைக்கால சிறப்புத் தொகை" கொடுக்கிறாராம். 2024, 2025 ஆண்டுகளில் நமக்கு கோடைக்காலமே வரவில்லையா ஸ்டாலின் அவர்களே?

சிறுமி முதல் மூதாட்டி வரை எந்தவொரு பெண்ணுக்கும் பாதுகாப்பு இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை சீர்குலைத்துவிட்டு, இப்போது "தேர்தல் நேரத்து பணம்" வரவு வைக்கும் இந்த "பேட்ச்வொர்க் (PATCHWORK)" வேலையை தமிழ்நாட்டுப் பெண்கள் நம்பி விடுவார்களா என்ன? செப் 2023 முதல் இதுவரை உங்கள் அரசு கொடுத்த தொகை ரூ. 34,000! ஆனால், உங்கள் ஆட்சியால் ஒவ்வொரு குடும்பமும் இழந்த குறைந்தபட்சத் தொகையே "ரூ.3,50,000"! இதை 'விடியே ஆட்சி வீட்டு பில்லே சாட்சி' என்று வீடு வீடாக சென்று அதிமுக அம்பலப்படுத்தி வருவதைக் கண்ட பயத்தில் வருவது தானே இந்த அறிவிப்பு? இப்போது "மாதம் 2000 ரூபாய்" என்று நான் அளித்த அதிமுக தேர்தல் வாக்குறுதியைக் கண்டதும், வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் பயத்தில், இந்த அறிவிப்பு வெளியில் வருகிறது பாருங்கள் மக்களே...

யாரும், எந்தவொரு திட்டத்தையும் தடுக்காத போதிலும், நீங்களாக வந்து "ஐயையோ முடக்கப் பார்க்கிறார்கள்" என்று சொல்வதைப் பார்த்ததால் வேடிக்கையாக இருக்கிறது. "அனைத்து குடும்ப அட்டைக்கும்" என்று வாய்கிழிய அளித்த வாக்குறுதியை 5 ஆண்டுகளாக நிறைவேற்றாமல், தகுதியானவர்களுக்கு மட்டும் என சொல்லி, 1 கோடி தமிழ்ப் பெண்களை நிராகரித்துள்ளீர்கள். தமிழக மக்களின் பேராதரவுடன் இன்னும் மூன்று மாதங்களுக்குள் அமையவுள்ள அதிமுக ஆட்சியில், தமிழகப் பெண்களுக்கு "குல விளக்குத் திட்டம்" மூலம் அனைத்து குடும்பத் தலைவிக்கும் "மாதம் ரூ.2000" என்று நான் அளித்த வாக்குறுதியானது, அதிமுக ஆட்சி அமைந்தவுடன் அமல்படுத்தப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நன்றி தெரிவிக்க வேண்டும் - தமிழிசை சவுந்தரராஜன்



**சென்னை, பிப்.14:** தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மத்திய அரசு தடுக்க முயற்சிப்பதாக கூறி, மகளிர் உரிமைத் தொகையை முன்கூட்டியே அறிவித்து இருப்பதற்கு தமிழ்நாடு பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்த X தளப் பதிவில் அவர், "மத்திய அரசு மகளிர் உரிமை மானியங்களை தடுக்க இருப்பதாக கூறி, முன்கூட்டியே அறிவித்துள்ளதாக தெரிவித்து இருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு நான் கடும் கண்டனம் தெரிவிக்கிறேன். மத்திய அரசு அதை தடுக்க முயற்சிப்பதால் தான், தனது அனைத்து தோல்விகளுக்கும் மத்திய அரசை குறை கூறும் பழக்கம் அவருக்கு உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலின் போது கூட அது தடுக்கப்படவில்லை என்பதை அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மேலும் எந்தவொரு முடிவும் மத்திய அரசிடமிருந்து அல்ல, தேர்தல் ஆணையத்திடம் இருந்து வர வேண்டும். தேர்தல் பயம் மற்றும் காய்ச்சல் காரணமாக தமிழக முதல்வர் இதை அறிவிக்கிறார். தமிழகத்தில் நிலவும் அதிக எதிர்ப்பு காரணமாக திமுக வெற்றி பெறும் என்ற நம்பிக்கை இல்லை.

90 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தங்கள் கணக்குகளில் ஒரே இரவில் அதைப் பெற்றதில் அவர்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள். இதற்காக ஜன்தன் கணக்குகள் மற்றும் டிஜிட்டல் இந்தியாவை தொடங்கிய நமது மாண்புமிகு பிரதமருக்கு தமிழக முதல்வர் பாராட்ட வேண்டும், நன்றி சொல்ல வேண்டும்.

மாண்புமிகு நரேந்திர மோடியின் முத்ரா கடன்கள் தமிழ்நாட்டில் 1 கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு பயனளித்துள்ளன, இது அவர்களை தொழில் முனைவோராகவும் தன்னம்பிக்கை கொண்ட பெண்களாகவும் மாற்றியுள்ளது.

பெண்களுக்கான ஊக்கத்தொகையை அறிவித்து டாஸ்மாக் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காதது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஏனெனில் ஒரு கணக்கெடுப்பு குடிகாரனைக் கொண்ட ஒரு குடும்பம் மாதத்திற்கு 6000 ரூபாய்க்கு மேல் மதுபானத்திற்காக செலவிடுவதாகக் கூறுகிறது.

தமிழ்நாடு அரசு கடன் ரூ. 4.5 லட்சம் கோடியில் இருந்து ரூ. 9.5 லட்சம் கோடியாக உயர்த்தியுள்ளது. அதாவது ஒரு தமிழரின் கடனை ரூ. 1.4 லட்சமாகவும், வட்டிக்கு 40,000 ஆகவும் உயர்த்தியுள்ளது.

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி ரூ. 2000 அறிவித்துள்ளார், அதை தமிழக முதல்வர் இப்போது நகலெடுத்து வருகிறார். கடந்த ஆண்டு ஒரு பத்திரிகையாளர் திமுக அமைச்சரிடம் பொங்கல் ஊக்கத்தொகை ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டபோது, இந்த ஆண்டு கொடுத்தால் மக்கள் மறந்துவிடுவார்கள், அடுத்த ஆண்டு வழங்குவோம் என்று பதிலளித்தார், அவர்கள் அதைச் செய்தார்கள். இவை அனைத்தும் மு.க. ஸ்டாலின் தேர்தல் பயம் மற்றும் காய்ச்சல் காரணமாக அறிவிக்கிறார்," என்று குறிப்பிட்டுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com